# தின மகுடி

01 பெப்ரவரி 2013 - 10 | இது ஒரு மாத இதழ் | விலை ரூபா 100/=



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

ஆயாதி கணித ஆகம சிற்ப சாஸ்திர
தியான விதிமுறைக்கமைய சிலாவிக்கிரகம்,
தாம்பரவிக்கிரகம்
கலங்கள்
கோடிஸ்தம்பம்
சோட உபசாரங்கள்
பட்டுக் குடைகள்
யாகசாலை, தேர் அலங்காரப் பொருட்கள்
சில்வர், பித்தலை, தகட்டுத்திருவாசிகள்
சில்வர் பித்தளை,
ஆசனங்கள்
காண்டாமணிகள்
தேர்மணிகள்
ஆசனக்கற்கள்
தளவரிசைக்கற்கள்
கோமுகைக்கற்கள்
ஸ்நபன கும்பச்செம்புகள்
கும்பகோண, கேரள நகாஸ் குத்துவிளக்குகள்
வெள்ளி, தங்க அங்கிகள், கிரீடங்கள்
திருக்கோயில் பிரதிஷ்டா யந்திரங்கள் மற்றும்
தங்கப் பிளேட்டிங்கும்
செய்துக் கொடுக்கப்படும்.



# காயத்திரி

## டிரேட் சென்டர்



142-P, ஆண்டிவால் வீதி, கொழும்பு - 11. 94-11-4979684,
40/7, கோயில் வீதி, முகத்துவாரம், கொழும்பு - 15. 94-11-4978185



மௌனம் பேசியதே படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் நடிகை த்ரிஷா. கமல், அஜித், விஜய், சூர்யா, விக்ரம் என தமிழ்த் திரையுலகின் பல முன்னணி நடிகர்களுடன் நடித்துவிட்ட த்ரிஷா தமிழ் மட்டுமல்லாமல் தெலுங்கு திரையுலகிலும் முன்னணி நடிகைகளில் ஒருவராக இருக்கிறார். 'த்ரிஷாவிற்கு வயதாகிவிட்டது. இனி இளம் ஹீரோக்களுடன் ஜோடி போட்டு நடிக்க முடியாது' என யாரோ சொல்ல கொதித்தெழுந்த த்ரிஷா ஜீவா, ஜெயம் ரவி, விஷால் ஆகிய இளம் தலைமுறை நடிகர்களின் படத்தில் கமிட் ஆகியிருக்கிறார். சமீபத்தில் தனது சினிமா வாழ்க்கையில் 10 ஆண்டுகளை கடந்த த்ரிஷா உற்சாகத்துடன் இருக்கிறாராம். தனது நண்பர்களிடம் 'என் உடலை இதேபோல் ஒல்லியாகவும், உடலமைப்பில் மாற்றம் ஏற்படாமலும் பராமரித்துவிட்டால் மேலும் 10 ஆண்டுகள் கண்டிப்பாக சினிமாவில் என்னை யாரும் அசைக்க முடியாது' எனக் கூறியிருக்கிறாராம். தனது தந்தை இல்லாத கிறிஸ்மஸை எப்படி கொண்டாடுவது என்று தெரியாமல் கடைசியாக தன் தந்தையுடன் நியூயார்க்கில் கொண்டாடிய கிறிஸ்மஸை நினைவு கூர்ந்துகொண்டிருக்கிறார் நடிகை த்ரிஷா.



# யாராலும் அசைக்க முடியாது - த்ரிஷா!

# தின மகுடி

## நன்றே செய்வோம்

"எந்தக் கப்பலும் துறைமுகத்தில் பாதுகாப்பாக இருக்கும் ஆனால் அதற்காக கப்பல் கட்டப்படுவதில்லை. கடலில் ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு பயணிப்பதற்காகவே கப்பல் கட்டப்படுகிறது"- என்றார் அறிஞர் கிரேஸ் முர்.

இந்தவகையில் தினமகுடியும் துறைமுகத்தில் பாதுகாப்பாக இருக்கும் கப்பல் போலன்றி சவால்களை எதிர்கொண்டு பயணிக்க துடிக்கும் கப்பலாகவே, உங்கள் கரங்களில் தனது பத்தாவது இதழைத் தவழவிட்டுள்ளது.

நம்நாட்டு தமிழ் கலை, இலக்கியப் பரப்பு காத்திரமான படைப்புகளின் களமாக உலகளவில் கருதப்படுகின்ற போதும், நம்மவர்களின் எண்ணங்களில் ஸ்திரமான இடத்தை பிடித்துக் கொள்ளவில்லை. "அது போல் இது வருமா?" ஏன்ற கேள்விகளை எழுப்பிவைக்க கூடிய எண்ண உலாவலுக்குள்ளேயே நாம் சிக்குண்டிருக்கின்றோம்.

இந்த எண்ணக் கிடக்கையை மாற்றி அமைக்க வேண்டும் என்ற முயற்சிகள் பலராலும் பல்நெடுங்காலமாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனினும் இந்த மாயவலைக்குள் இருந்து நம்மவர்கள் மீளவில்லை 'மீள முயற்சிக்கவுமில்லை.

நமக்குரிய கலை, இலக்கியத் தனித்துவங்களை நிலைநாட்டுவதில் நாம் கருசனையற்றவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது பற்றி சிந்திப்பதற்கான தேவையை எமது இறக்குமதி தமிழ் கலை, இலக்கியங்கள் இல்லாமல் செய்து கொண்டிருக்கின்றன.

இறக்குமதிகளின் மேலான மோகம் எம்மை மிகவும் ஆட்கொண்டுள்ளது இதிலிருந்து விடுபடுவது என்பது கல்லில் நார் உரிப்பதற்கு சமமானது. இவற்றைத் தெரிந்து கொண்ட போதும் எமது படைப்பாளிகள் தமது முயற்சிகளை மேற்கொண்டே வருகின்றனர். இத்தகையவர்களை ஊக்குவிக்க வேண்டியது நமது தனித்துவத்தை நிலை நாட்ட வேண்டும் என்ற தவிப்புக்குள் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனின் கடமையல்லவா?

எனவே நமது கலை, இலக்கிய முயற்சிகளுக்குக் கை கொடுக்கும் கடமைகளைச் செய்திட தினமகுடி வாசகர்கள் முன்வர வேண்டும் என்பதை உரிமையோடு கேட்டுக் கொள்ளவிரும்புகிறோம்


*நன்றே செய்வோம் அதை*
*இன்றே செய்வோம் வாரீர்!*

---

**ஆசிரிய பீடம் தினமகுடி**
**இல. 238 கடற்கரை வீதி, கொழும்பு-11**
தொலை பேசி : 011 3137921
தொலைநகல் : 011 2334633
gmail : thinamakudis@gmail.com
PO.BOX : 2020



## ஒலிம்பிக் 2014



பிரித்தானியாவின் தலைநகரான லண்டனில் அடுத்த வருடம் சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதனை முன்னிட்டு அமைக்கப்படும் கட்டிடங்களை படங்களில் காணலாம்.





# விண்வெளியில் நாஸா முயற்சி!

**வி**ண்வெளியில் சுற்றித்திரியும் ராட்சத விண்கல்லொன்றை இழுத்துச் சென்று சர்வதேச விண்வெளி ஆய்வுக்கூடத்தின் எரிபொருள் நிலையமாக பயன்படுத்தும் முயற்சியை நாசா திட்டமிட்டுள்ளது.

இதற்கான திட்டம் நாசா மற்றும் கலிபோர்னியா அறிவியல் தொழில்நுட்ப மத்திய நிலையம் ஆகியவற்றின் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இது குறித்த பேச்சுவார்த்தை அமெரிக்க வெள்ளை மாளிகை நிர்வாகத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

செவ்வாய்க் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பி ஆய்வு நடத்த முடிவு செய்துள்ள அமெரிக்கா, அதற்காக இன்னும் 10 ஆண்டுகளுக்கு தேவையான பல்லாயிரம் கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்நிலையில், செவ்வாய்க் கிரகத்துக்குச் செல்லும் வழியில் சர்வதேச விண்வெளி ஆய்வுக் கூடத்தில் எரிபொருள் நிரப்பி செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான எரிபொருள் நிலையம் அமைக்க 5 இலட்சம் கிலோ எடையுள்ள விண்கல்லொன்றைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

விண்ணில் சுற்றி திரியும் அந்த விண்கல் அட்லஸ் 5 ரொக்கெட் மூலம் இழுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. அட்லஸ் 5 ரொக்கெட்டுடன் விண்கல்லை பிடிக்கக்கூடிய பெரிய கூண்டு ஒன்றும் அந்த ரொக்கெட்டுடன் சேர்த்து அனுப்பப்படவுள்ளது.

அது விண்கல்லை பிடித்து அப்படியே இழுத்து சென்று சர்வதேச விண்வெளி மையம் அருகே நிலை நிறுத்தும் வகையில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இன்னும் 10 முதல் 12 ஆண்டுகளுக்குள் இந்த திட்டத்தை நிறைவேற்ற முடியும் என நாசா மையம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் நிறைவேற்றப்படும் பட்சத்தில், விண்கல்லொன்றை நகர்த்தும் முதலாவது மனித முயற்சியாக அது அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

# செல்போன் விபரீதம்!

நீங்கள் செல்போனிலோ வீடியோ கேமராவிலோ உங்களின் அந்தரங்கத்தை படம் பிடித்து ரசிப்பவர்களாக இருந்தால்... வெரி சொறி .... உங்களின் அந்தரங்க வீடியோ இப்போது உலகம் முழுக்க பரவிக்கொண்டிருக்கலாம். என்னடா இது ஆச்சரியம் என்று யோசிக்கவேண்டாம் ! முதலில் உண்மைச் சம்பவம் 2 டைப் பார்ப்போம். பின்னர் விடையத்துக்கு வரலாம் !

அது எப்படி... என் செல்போனில் நான் என்னைப் படம் எடுப்பதால் என்ன ஆபத்து வந்துவிடப் போகிறது?" என்று யோசிக்கிறீர்களா... வெயிட்... உங்களுக்காகவே சாம்பிளுக்கு சில சம்பவங்கள்... (பெயர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன.)

கொழும்பில் வசிக்கிறார்கள் மதுமிதா - ராம். புதுமணத் தம்பதிகளான இவர்கள் ஐ.டி. துறையில் வேலை செய்கிறார்கள். ஒருநாள் நண்பர் ஒருவரால் மதுமிதாவுக்கு அனுப்பப்பட்டிருந்த அந்த மெயிலில் ஒரு வீடியோ இணைக்கப்பட்டிருந்தது. அதைத் திறந்து பார்த்த மதுமிதாவுக்கு அதிர்ச்சியில் இதயமே வெடித்துவிடும் போலிருந்தது. காரணம், அந்த வீடியோ மதுமிதாவும் அவர் கணவன் ராமும் பெட்ரூமில் அந்தரங்கமாக இருந்தபோது சும்மா ஜாலிக்காக செல்போனில் எடுத்தது. கொஞ்ச நேரம் அதைப் பார்த்து ரசித்துவிட்டு, செல்போனிலிருந்து அப்போதே அதை அழித்தும் விட்டார்கள். ஆனால் அது இப்போது இண்டர்நெட் முழுக்க பரவிக் கொண்டிருக்கிறது. 'செல்போனில் இருந்து டிலீட்(delete) செய்த ஒரு வீடியோ எப்படி இண்டர்நெட்டுக்குப் போகமுடியும்? என்பதுதானே உங்கள் டவுட். அதற்கான விடை யைத் தெரிந்து கொள்வதற்கு முன் மேலும் சில அதிர்ச்சிச் சம்பவங்களையும் பார்த்துவிடுவோம்.

நானுஓயாவை சேர்ந்த அந்தப் பெண்ணின் பெயர் ரம்யா. துறுதுறுவென துள்ளித் திரியும் டீன் ஏஜ் பெண். 10 ஆம் வகுப்பு படிக்கிறாள். உடன் படிக்கும் மாணவிகள் பலர் செல்போன் வைத்திருக்கிறார்கள் என அப்பாவை நச்சரிக்கவே அவரும் ஒரு விலைகூடிய கேமரா செல்போனை வாங்கிக் கொடுத்தார். ஒருநாள் பெட்ரூமில் கண்ணாடி முன் நின்று தன் அழகை ரசித்துக் கொண்டிருந்தவளுக்கு செல்போனில் தன் உடலை அரை நிர்வாணமாகப் படம் பிடித்தால் எப்படி இருக்கும் என்று தோன்றியது. உடனே அதைச் செய்தும் விட்டாள். பின்னர் சிறிது நேரம், அந்த வீடியோவை ரசித்துப் பார்த்துவிட்டு போனில் அந்த வீடியோவை அழித்துவிட்டாள். ஆனால் இப்போது அந்த வீடியோவும் நெட்டில் உலா வந்து கொண்டிருக்கிறது. டிலீட் செய்த ஒரு வீடியோ எப்படி இணையத்துக்குப் போனது என்பதுதான் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் புரியாத புதிர்.

**அந்த புதிருக்கான விடையின் பெயர் 'ரெக்கவரி சாஃப்ட்வேர்!**

மேலே சம்பவத்தில் இடம்பெற்ற எல்லோருக்கும் ஒன்றுபோல் ஒரு விஷயம் நடந்தது. அது அவர்களின் செல்போனும் டிஜிட்டல் கேமராக்களும் ஒருநாள் பழுதடைந்தது. அவற்றைச் சரி செய்ய கடைகளில் கொடுத்திருந்தார்கள். அங்கிருந்துதான் அவர்களின் மானம் இணையதளத்தில் பறக்கவிடப்பட்டது. செல்போன், கம்பியூட்டர் பயன்படுத்தும் நம்மில் பலருக்கு அதுகுறித்த முழுமையான தகவல்கள் தெரிவதில்லை. அதுவும் தங்கள் செல்போனில் எடுக்கப்பட்ட ரகசிய போட்டோக்கள், வீடியோக்கள் அழிக்கப்பட்ட பின்னரும் மீண்டும் அதைப் பார்க்க முடியும் என்கிற விஷயம் பலருக்குத் தெரியாது. உங்கள் மோபைல் போனை சிம்பிளாக அதன் சார்ஜர் வயரைப் பாவித்து கணனியில் இணைத்தால் போதும்.

இந்த ரெக்கவரி சாஃப்ட்வேர் மூலமாக அழிக்கப்பட்ட வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களை மட்டும் உடனே எடுத்துவிட முடியும். எனவே இனிமேல் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது ! உங்கள் மோபைல் போனை யாரிடமாவது கொடுப்பதோ இல்லை திருத்த வேலைகளுக்காகக் கொடுப்பதையோ உங்களுக்குத் தெரிந்தவர்கள் மற்றும் நம்பிக்கையானவர்களிடம் கொடுப்பது நல்லது!



விரைவில்...
வருகிறது..!
Varanam
வரணம்

# பொங்கல் ரிலீஸ்




2013 பொங்கல் திரைப்பட ரசிகர்களுக்கு கொண்டாட்டம் தான். கார்த்தி, அனுஷ்கா, சந்தானம் நடிப்பில் சுராஜ் இயக்கத்தில் “அலெக்ஸ் பாண்டியன் இது கார்த்திக்கு முக்கியமான படம் சகுனி யின் தோல்வியின் பின் வருவதால் மிகுந்த எதிர்பார்ப்பு இந்த படத்திற்கு இருக்கின்றது.

, அவன் இவனுக்கு பின் விஷால் வரலக்சுமி,அஞ்சலி நடிப்பில் சுந்தர் சியின் இயக்கத்தில் “மதகஜராஜா“. கலகலப்பு படத்திற்கு பிறகு சுந்தர் சி இயக்கிய படம்.

அமீர் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் “ஆதிபகவன்“, பல படங்கள் தொடர் தோல்வியால் ஜெயம் ரவி வெற்றிக்கா நம்பியிருக்கும் படம்.

கௌதம் வாசுதேவ மேனன் இயக்கத்தில் ராம் இயக்கி நடிக்கும் “தங்க மீன்கள்“ உள்ளிட்ட படங்கள் “பொங்கல் வெளியீடுகளாக வர இருக்கின்றன.

கமல் தயாரித்து, இயக்கி, நடித்திருக்கும் “விஸ்வரூபம்“ படமும் பெங்கல் வெளியீடாக வெளியடப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இதேவேளை சிம்பு ஹன்சிகா சந்தானம் கூட்டணியில் உருவாகி யிருக்கும் வாலு படமும் சில வேலைகளில் பொங்கள் வெளியீடாக வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.







# இனி அவன் நாயகியின் இதமான அனுபவங்கள்!

நம் நாட்டு திரைப்பட உலகின் புதுவரவான 'இனி அவன்' படத்தின் நாயகியும் பிரபல அறிவிப்பாளருமான நல்ல தம்பி பிள்ளை சண்முகராஜ நிரஞ்சினியை தின மகுடிக்காக நாம் சந்தித்தபோது.........

**அறிவிப்புத்துறைக்கு நீங்கள் வரக் காரணம் என்ன?**

நான் அறிவிப்புத்துறைக்குஎன்று வரவில்லை. எனது சொந்த இடம் கண்டி, 2009 ஆம் ஆண்டு தனியார் தொலைக் காட்சியில் இடம்பெறும் பாட்டுப் போட்டிக்காக வந்தேன். அதன் போது நேத்ரா தொலைக்காட்சிக்கு அறிவிப்பாளர்கள் தேவை என்ற விளம்பரத்தை பார்த்து அதற்கு விண்ணபித் தேன். பின்னர் அங்கு அறிவிப்பாளராக நான் தேர்ந்தெடுக்கப் பட்டு கடந்த 3 வருடங்களாக அறிவிப்பாளராக கடமை யாற்றி வருகின்றேன்.

**உங்களது எந்த நிகழ்ச்சிகளை உங்கள் ரசிகர்கள் விரும்புகின்றார்கள்?**

நான் பங்கேற்கும் 'லஞ் டைம் ரிக்குவேஸ்ட்', நிகழ்ச்சியில் நேயர்கள் தொலைபேசி மூலம் விரும்பி பாடல்கள் கேட்பார்கள். சுமையல் நிகழ்ச்சி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடைய திறமைகளை வெளிக்கொணரும் ரலன் (கவிதா) நிகழச்சிகளை நேயர்கள் விரும்பிப்பார்க்கின்றார்கள்.



**அறிவிப்புத்துறையில் இருக்கின்ற நீங்கள் நடிப்புத்துறைக்கு போகக்காரணம்?**

எனக்கு நடிப்பது என்றால் மிகவும் பிடித்தமான ஒன்று மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள் என பலவற்றில் நடித்திருக்கிறேன். தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் '33 வருடங்களில்' என்ற சிங்கள மேடை நாடகத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகையாக நான் தேர்வு செய்யப்பட்டேன். பல சிங்கள மேடை நாடகங்களில் நடித்து வருகின் றேன். ஒரு சிங்கள தொலைக்காட்சி நாடகத்திலும் நடிதது்க் கொண்டு இருக்கின்றேன். தமிழில் கண்ணகிபுரம் என்ற தொடர் வானொலி நாடகத்திலும் நடித்திருக்கின்றேன். அரச சிறுவர் நாடக விழா வில் சிறந்த துணை நடிகை விருது வென்றிருக்கின்றேன். நாட கத்திற்காக 5 விருதுகள் கூட பெற்றிருக்கின்றேன்.

**'இனி அவன்' திரைப்படத்தில் நாயகியாக நடிக்க கிடைத்த அனுபவத்தைப் பற்றி....?**

நான் எதிர்பார்க்காதது ஒன்று இந்த நிமிடம் வரை என்னால் அந்த சந்தோஷத்தில் இருந்து



இன்னும் மீள முடியவில்லை. நான் நடித்த சிங்கள மேடை நாடகத்தை பார்த்த இயக்குநர் அசோக ஹந்தகம என்னை 'இனி அவன்' படத்தில் நடிக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆவர் சொன்ன கதை எனக்கு பிடித்துப்போய் விட் டது நீங்கள் அந்த கதாபாத்திரமாகவே மாற வேண்டும் யுத்த சூழ்நிலையில் மக்கள் எப் படி கஷ்டப்பட்டார்களோ அதே உணர்வை நீங்கள் கொண்டு வரவேண்டும் என்று சொல்லி கொடுத்தார். நாங்கள் நடிப்பதற்கு முழு சுதந்திரம் கொடுத்து மிகவும் சுலபமாக எம்மிடம் இருந்து நடிப்பை அவர் பெற்றுக் கொண்டார். மிகவும் திறமையான இயக்குநர். இந்த வேளையில் அவருக்கு நான்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

**'இனி அவன்' யாழ்ப்பாணத்தில் முழுக்க முழுக்கா படமாக்கப்பட்டதாக அறிகின்றோம் அங்குள்ள மக்கள் பற்றி...?**

உண்மையிலே அந்த நாட்கள் ரொம்ப சந்தோஷமான நாட்கள் இன்னும் மறக்க முடியவில்லை. நான் கண்டியில் பிறந்து வளர்ந்தபடியால் யாழ்ப்பாணத்திற்கு இப்போதுதான் முதன்முறையாக அதுவும் படப்பிடிப்புக்காகத்தான் சென்றேன். அங்குள்ள மக்கள் எந்த வேறுபாடும் பார்க்கா மல் என்னை அரவணைத்துக்கொண்டார்கள்.

தொலைக்காட்சியில் என்னை பார்த்த ரசிகர்கள் மிகவும் அன்புடனும் அரவணைப்புடனும் என்னை தங்களது சகோதரி போலவே பார்த்துக்கொண்டார்கள். யாழ்ப்பாணம், நல்லூர், வட்டுக்கோட்டை, காரைநகர், யாழ்.கோட்டை போன்ற இடங்களில் படப்பிடிப்பு இடம்பெற்றது. மக்கள் எங்களுக்கு கொடுத்த நல்ல ஒத்துழைப்பால்தான் நாங்கள் நன்றாக படப்பிடிப்பில் ஈடுபட்டோம்.

**இலங்கையில் எடுக்கப்படும் தமிழ் சினிமாக்கள் வெற்றியடையுமா?**

(இவ்வாளவு நேரமும் சிரித்து பதில் சொல்லிக்கொண்டிருந்த வருக்கு கோபம் வந்துவிட்டதுபோல)

ஏன் வெற்றியடையாது. முதலில் நம்மவர்கள் மாற வேண்டும். அவர்களின் ரசனையும் மாறவேண்டும். நம்மவர்களை அவர்கள் ஊக்கிவிக்க தவறுகின்றார்கள் இதனால் நமது திறமையான கலைஞர்களது படைப்புக்கள் முழ்கடிக்கப்படுக்கின்றது.

ஏதற்கு எடுத்தாலும் இந்தியாவில் இருந்து வருகின்ற எல்லாத்தையும் ரசிக்கின்றார்கள். நமது கலைஞர்களையும் ஊக்குவியுங்கள். அவர்கள் வெளியிடும் திரைப்படங்களை போய்திரையரங்கில் பாருங்கள். இந்தியாவில் இருந்து எது வந்தாலும் போய் பார்க்கும் நீங்கள். நமது பிள்ளைகள் வளர வாழ்த்துங்கள்.

நமது நாட்டில் திரைப்படம் தயாரிப்பது என்பது கஷ்டமானது ஒன்றுதான் அப்படி கஷ்டப் பட்டு தயாரித்து வெளியிடப்படும் படங்களுக்கு நம்மவர்கள் உதவவேண்டும். 50 ஆண்டுகளுக்கு பின் இலங்கையில் தமிழ் படம் வெளிவந்திருக்கு இன்னும் பல படங்கள் வெளிவரவேண்டும் என்றால் அது நம்மவர்களின் கையில்தான் இருக்கின்றது.

**நீங்கள் நடிப்பதற்கு உங்கள் வீட்டில் ஒத்துழைப்பு எப்படி இருந்தது?**

எனக்கு முழு சுதந்திரம் கொடுத்தனர். பிள்ளைகள் எந்த துறையில் முன்னேற வேண்டுமோ அவர்களை அந்த துறையில் செல்வதற்கு அனுமதித்து அவர்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கின்றார்கள். என் நண்பர்களை குறிப்பாக நான் சொல்ல வேண்டும். நான் இன்று இவ்வளவு தூரம் வருவதற்கு எனது நண்பர்களின் அறிவுரையும் அவர் களின் ஊக்கமளிப்பும்தான் காரணம்.

**உங்களது லட்சியம்.....?**

அறிவிப்புத்துறையில் எப்படி நிறைய ரசிகர்ளை அடைந்தேனோ. அதே மாதிரி தமிழ் சிங்கள மக்களிடையே திரைப்படங்களில் நடித்து நல்ல பெயரும் புகழும் அடை வேண்டும் என்பதுதான் எனது இலட்சியம் (ஆசை)

'இனி அவன்' படத்தில் திறமையாக நடித் தற்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு நாம் விடை பெற்றுக் கொண்டோம்...





# கும்கி திரை விமர்சனம்

**எ**த்தனையோ யானைகளை நாம் சினிமாவில் பார்த்திருக்கிறோம். ராமநாராயணன் படங்களில் யானை கிரிகெட் ஆடும் காட்சிகளையும் பார்த்ததுண்டு. ஆனால் ஒரு யானை ஹீரோவுக்கு நிகராக நடிக்க முடியும் என்று சாதித்துக் காட்டி இருக்கிறார் பிரபு சாலமன். கும்கி எப்போ ரிலீசாகும் என்று யானையைப் போலவே எதிர்ப்பார்புகளும் பெருத்துப்போய் கிடந்தது. அது அத்தனைக்கும் விடை சொல்கிற மாதிரி பிரம்மாண்டமாய் திரையில் கம்பீர நடை போடுகிறது கும்கி.

குமுளி தாண்டிய மலைக்காடுகளில் இருக்கும் ஆதிகுடிகளோட மலை கிராமம் தான் களம். அறுவடைக் காலத்தில் விவசாய நிலத்தில் புகுந்து பயிர்களை அழிப்பதும், ஆட்களை குத்திக் கொல்லுவதுமாக அசூரத்தனமான அட்டகாசங்களை செய்கிறது ஒரு காட்டு யானை. அரசாங்கமே அதை ஒன்றும் செய்ய முடியாமல் தவிக்கிறது. அறுவடையை நல்ல முறையில் செய்து முடிக்க, காட்டு யானையை எதிர்த்து சண்டைபோட சிறுவயதிலிருந்தே பழக்கப்பட்ட கும்கி யானையை ஊருக்குள் கொண்டு வருகிறார்கள் மக்கள்.

கோயில் யானையை கும்கி யானை என்று பொய் சொல்லி அந்த கிராமத்திற்கு கூட்டி வருகிறார் பொம்மன். தங்களுக்கு பாதுகாப்பு தருவதற்காக வந்திருப்பதால் அந்த ஊர் மக்கள் அவர்களை கடவுளாக பார்த்து மரியாதை செய்கிறார்கள். வந்த இடத்தில் அல்லியை பார்க்கிறார் பொம்மன். காதல் வருகிறது. அந்த ஊரைவிட்டு போக முடியாமல் தவிக்கிறார்.

ஒரு பக்கம் காட்டு யானை எப்போது வருமோ என்ற பரபரப்பு. இன்னொரு பக்கம் இவர்கள் காதல் ஊருக்கு தெரிந்துவிடுமோ என்ற விறுவிறுப்பு. தங்கள் இனத்துப் பெண்களை மற்ற ஊர்காரர்களுக்கு கட்டிக் கொடுப்பதில்லை என்ற ஊர்கட்டுப்பாடும் ஹீரோவுக்கு தெரியவருகிறது. கடைசியில் காதல் கைகூடுகிறதா? காட்டு யானைக் கொல்லப்படுகிறதா? என்பதே க்ளைமாக்ஸ்!

யானைப் பாகனாக பொம்மன் கதாபாத்திரத்தில் சிவாஜியின் பேரனும் பிரபுவின் மகனுமான விக்ரம் பிரபு. சிவாஜியின் ஜாடையும் இல்லை. பிரபுவின் ஜாடையும் இல்லை. அசல் யானைப் பாகன் போலவே காட்சியளித்தார். விக்ரம் பிரபுவின் உயரம், உடல் அமைப்பு எல்லாமே பாகன் கதாபாத்திரத்திற்கு கச்சிதமாய் அமைந்தது. யானையின் தந்ததின் மீது தண்டால் எடுப்பதும், காதலியை யானை மீது அமர வைத்து ஊரை சுற்றுவதும் என சிறந்த நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்.

மலைவாழ் பெண்ணாக அல்லி கதாபாத்திரத்தில் வருகிறார் லட்சுமி மேனன். அதே மாதிரியான சேலை, பாசி மணி. ஊசி மணி, காதில் ஏகப்பட்ட தோடுகள், சைடு வாங்கின மாதிரி ஒரு குதிரைவால் கூந்தல் என அசத்தியிருக்கிறார். அந்த மேக்கப் இல்லாத முகத்திலும் அவ்வளவு அழகு. பார்த்தவுடனே காதல் வருவதால், ஹீரோயினை சரியாக தேர்ந்தெடுத்திருக்கிறார் இயக்குனர்.

சமீபத்திய காலங்களில் வடிவேலு இல்லாத குறையை தம்பி ராமைய்யா தீர்த்து வைக்கிறார் என்றே சொல்லலாம். கொத்தல்லி என்ற கதாபாத்திரத்தில் காட்சிக்கு காட்சி கலாய்க்கிறார் மனுஷன். நக்கல் வசனங்கள், செண்டிமெண்டான நடிப்பு என தம்பி ராமைய்யா சககைபோடு போடுகிறார். பல இடங்களில் சிரிக்கவும் வைக்கிறார், சில இடங்களில் நெகிழவும் வைக்கிறார். நான் அவ்வளவு பெரிய ஆள் இல்லை என்று அவரே சொன்னாலும், ஊரில் இருப்பவர்கள் அவரை சாகச வீரர் என்று புகழ் பாடுவது செம கலாட்டா. உண்டியல் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் அஷ்வினும் மனதில் நிற்கிறார்.

ஊர்தலைவர் மாத்தய்யாவாக வரும் ஜோ மல்லூரியும் அவருக்கு துணையாக இருக்கும் ஜூனியர் பாலைய்யாவும் அந்த இனத்து மக்கள் போலவே இருக்கிறார்கள், நடிப்பிலும் தோற்றத்திலும்.

இதில் மிக முக்கியமானவர் மாணிக்கம். அது தான் கும்கியாக நடித்திருக்கும் யானையின் பெயர். யானையின் கண், கால், காது என எல்லா அசைவுகளையும் அற்புதமாக காட்சிப்படுத்தியிருக்கிறார் இயக்குனர். பொம்மனுக்கும் யானைக்கும் இருக்கிற பாசம், அல்லிக்கு யானை மேல் இருந்த அன்பு என உறவுகளை உணர்வுகள் குறையாமல் காண்பித்திருக்கிறார் இயக்குனர்.

அடுத்தவர், இசையமைப்பாளர் டி.இமான். கும்கியின் நடையைப் போலவே கம்பீரமாய் கேட்கிறது டி.இமானின் இசை. ஆறு வெரைட்டியான பாடல்கள். 'சொல்லிட்டாலே அவ காதல...' பாடல் இந்த ஆண்டின் மிக சிறந்த மெலோடி பாடலாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இவரோடு சேர்ந்து பாடலாசிரியர் யுகபாரதியும் பிரமிக்க வைக்கிறார். எளிமையான வார்த்தைகளை காட்சிக்கு ஏற்ற கவிதையாக பாடல்களில் கொடுத்திருக்கிறார் யுகபாரதி.

படத்தின் அடுத்த பிரம்மிப்பு ஒளிப்பதிவாளர் சுகுமார். நம்ம ஊரையும் ஹாலிவுட் ஸ்டைலில் காட்ட முடியும் என்று அதற்காக முயற்சித்திருக்கிறார். அருவியின் உச்சிக்க்கு நம்மை அழைத்து சென்றதும், யானை நீந்தும் காட்சியில் தண்ணீருக்கு அடியில் நம்மை மூழ்கடிப்பதும் என யானையைப் பார்ப்பது போலவே நம்மை காட்சிக்கு காட்சி பிரமிக்க வைக்கிறார். காட்டுக்கு நடுவே பாதை அமைத்த கலை இயக்குனர் வைரமாலனின் உழைப்பும் நன்றாகவே தெரிகிறது.

பிரபு சாலமோனை அவர் விருப்பத்துக்கு ஒரு படம் எடுக்க சுதந்திரம் கொடுத்த தயாரிப்பாளர் லிங்குசாமிக்கு ஒரு பெரிய பாராட்டு. சரியான கதை, கச்சிதமான கதாபாத்திரப் படைப்பு, வித்தியாசமான களம், நெருடல் இல்லாத கிரா.'. பிச்ஸ் காட்சிகள், என மீண்டும் மக்களை ஏமாற்றாத ஒரு படைப்பைக் கொடுத்த இயக்குனர் பிரபு சாலமோனுக்கு அடுத்து எடுக்கப் போகிற நல்ல படத்துக்கான வாழ்த்துகள்.

*கும்கி - கம்பீரமான வெற்றி!*



# மரணத்தின் விளிம்பில்..!

மரணத்தின் விளிம்பில் யாருமே அதிக நேரம் தங்கி விடக் கூடாது என்று அருணாச்சலத்திற்குத் தோன்றுகிறது. ஏனென்றால் வாழ்ந்த விதத்தையும் நடந்து முடிந்தவைகளையும் இந்த நேரத்தில் அசைபோட மட்டுமே மனிதனால் முடிகிறது.

ஆனால், எதையும் சரி செய்யவோ மாற்றவோ அவகாசம் இல்லை.

"ஆஸ்பத்திரியில் வைத்துப் பயன் இல்லை. வீட்டுக்குக் கொண்டு போய் விடுங்கள்" என்று மருத்துவர்கள் ஆலோசனை சொன்னதால் அவரை வீட்டுக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அதிக பட்சம் மூன்று நாட்கள் இருப்பார் என்று டாக்டர் சொல்லியிருந்தார். ஆனால் கண்களை மட்டும் திறந்து பார்க்கவும் சுற்றிலும் மற்றவர்கள் பேசவும் கேட்கவும் மட்டுமே முடிந்த ஒருவருக்கு ஒவ்வொரு கணமும் யுகமாகக் கழியும் அந்தக் கொடுமையை அருணாச்சலம் மட்டுமே அறிவார்.

மனைவி, மகன், மகள் மூவருக்கும் அவர் மரணத்தில் துக்கம் இல்லை என்று சொல்ல முடியாது. ஆனாலும் அதையும் மீறி உயிலில் என்ன எழுதியிருக்கிறார் என்கிற கவலை மேலோங்கி இருந்தது. ஏகப்பட்ட சொத்தை சுயமாக சம்பாதித்திருந்த அவர் உயிலை அடிக்கடி மாற்றும் பழக்கம் உடையவரானதால் கடைசி உயிலில் தங்கள் நிலை என்ன என்கிற கவலையை அவரருகில் உட்கார்ந்து தாழ்ந்த குரலில் தங்களுக்குள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அது காதில் விழ விழ மனம் ரணமாகிக் கொண்டே இருந்தது. மனிதனை விட பணம் பிரதானமாகும் போது பாசமென்ன, பந்தமென்ன?

"அந்த நாசமாப் போன வக்கீல் இந்த நேரமாய் பார்த்து சிங்கப்பூர் டூர் போயிட்டார். அவர் திங்கள்கிழமை தான் வருவாராம்" -இது மகன். இன்று வியாழக்கிழமை. திங்கட்கிழமை வரை காக்க அவனுக்குப் பொறுமையில்லை.

"அப்பா எனக்கு கண்டிப்பா ஒரு வீடு எழுதி வைப்பார்னு நாங்க ஹவுசிங் லோன் கூட போடாமல் இருக்கோம். உயில்ல என்ன எழுதி இருக்கார்னு உங்கிட்ட ஏதாவது சொல்லியிருக்காராம்மா?" இது மகள்.

"உயிலைப் பத்திக் கேட்கறப்ப எல்லாம் இப்ப எப்படியிருக்காரோ அப்படியே தான் இருப்பார். எந்த முக்கியமான விஷயத்தை என் கிட்ட வாய் விட்டுச் சொல்லியிருக்கார்" - இது மனைவியின் புலம்பல்.

குடும்பம் தான் இப்படி என்றால் வந்து விட்டுப் போன அக்கம் பக்கத்தினர், உறவினர், நண்பர்கள், அவர் கம்பெனி ஊழியர்கள் என எல்லோருமே ஒரு சம்பிரதாயத்திற்கு வந்தது போலத் தான் அவருக்குப்பட்டது.

குடும்பத்திற்காக ஏகப்பட்ட சொத்தை சேர்த்து விட்டு விடை பெறப் போகும் இந்தத் தருணத்தில் தன் குடும்பத்திடம் இருந்து அவர் இதை எதிர்பார்க்கவில்லை.



பணத்தையும் சொத்துக்களையும் சம்பாதித்தவர் மனிதர்களை சம்பாதித்து வைக்கவில்லை என்பதை உணர்கிறார். சொர்க்கம் நரகம் என்று சொல்லப்படுவதெல்லாம் செத்த பிறகு போகும் இடங்கள் அல்ல, இந்தக் கடைசி கணங்களில் ஒவ்வொருவனும் எல்லாவற்றையும் சீர் தூக்கிப் பார்க்கும் மனநிலையே என்று அவருக்குத் தோன்றுகிறது.

"சேர் எப்படியிருக்கார்" என்று அவரது டிரைவரின் குரல் கேட்க கண்களைத் திறந்தார். அவரது டிரைவரின் மகனும் கூட நின்றிருந்தான். நான்கு வருடங்களுக்கு முன்பு உயர்தரப் பரிட்சையில் மாவட்டத்தில் முதலிடம் வந்த மாணவன் அவன். அப்போது என்ன படிக்க வைக்கப் போகிறாய் என்று டிரைவரைக் கேட்ட போது "அவன் இன்ஜீனியர் படிக்க ஆசைப்படறான்.

அதெல்லாம் நமக்கு முடியுமா எசமான். ஏதோ படிக்கட்டும்னு இருக்கேன்" என்று டிரைவர் சொன்னார். அத்தனை நல்ல மார்க் வாங்கிய பையன் ஒரு சாதாரண பட்டப் படிப்பு படிக்கப் போவது பொறுக்காமல் "இன்ஜீனியருக்கே படிக்க வையுப்பா. படிக்கறதுக்கு ஆகற செலவை நான் பார்த்துக்கறேன். எக்கௌண்டண்ட் கிட்டே சொல்லி வைக்கறேன். தேவையானதை சொல்லி வாங்கிக்கோ" என்று சொன்னார். எத்தனையோ செலவாகிறது இது பெரிய விஷயமல்ல என்று அவர் அன்று நினைத்தார்.....

அவர் மனைவி சொன்னாள். "டாக்டர் கையை விரிச்சுட்டார். வீட்டுக்கு எடுத்துகிட்டு போக சொல்லிட்டார்.." அதைக் கேட்ட டிரைவரும், டிரைவரின் மகனும் லேசாகக் கண்கலங்கினார்கள்.

"என் மகனுக்குக் நல்ல வேலை கிடைச்சுடுச்சும்மா. மாசம் ஆரம்பத்திலயே 25000 சம்பளம். எல்லாம் சார் போட்ட பிச்சை. அதான் சாரு கிட்ட சொல்லி ஆசிர்வாதம் வாங்கிட்டு போக கூட்டிகிட்டு வந்தேன்"

அந்த இளைஞன் அவர் காலைத் தொட்டு வணங்கினான். அவன் முகத்தில் நன்றியுணர்வு நிறைந்திருந்தது. டிரைவரும் கண்கலங்க அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டார்.

அருணாச்சலம் அவர்கள் இருவரையும் ஒரு கணம் நிறைந்த மனதுடன் பார்த்தார். அந்த இளைஞனின் வெற்றியும் அவன் நன்றியுணர்வும் அந்தக் கடைசி தருணத்தில் மனதுக்கு இதமாக இருந்தது.

அவரும் ஓரிரண்டு மனிதர்களை சம்பாதித்திருக்கிறார். அடிமட்டத்தில் இருந்து ஆரம்பித்த வாழ்க்கையில் செய்த சாதனைகள் சேர்த்த சொத்துக்கள் எல்லாவற்றையும் விட அந்த மாணவன் படிக்க அவர் செய்த சிறிய உதவி மட்டுமே அர்த்தமுள்ள செயலாக அவருக்கு அப்போது தோன்றியது.

வாழும் போது பெரிதாகப்பட்ட எல்லா விஷயங்களும் மரணத்தின் விளிம்பில் நின்று பார்க்கையில் அற்பமாகத் தெரிந்தது

அந்த இளைஞனைப் பார்த்து அவர் புன்னகைத்தார். அந்தக் கணத்தில் மரணம் அவரை நெருங்க ஆரம்பித்தது. வாழ்க்கையைத் திரும்பவும் வாழ முடிந்திருந்தால் இது போல் மேலும் பல நல்ல காரியங்கள் செய்திருக்கலாம் என்பது தான் அவரது கடைசி நினைவாக இருந்தது.

**-என்.ஜி.**





# சின்னக் குயில் சித்ரா!

**நா**ம் எப்போதும் சில பாடக, பாடகிகளை மறக்க முடியாது. அவர்களின் சில பாடல்கள் எமக்கு எப்போதும் நினைவில் நிற்கும். ஒன்றா, இரண்டா எத்தனை பாடல்கள். சித்ராவின் இனிமையான குரலில் எத்தனை பாடல்கள் என்று விரும்பி கேட்பது. எல்லாம் சிறந்த பாடல்கள் தானே.

'பாடறியேன் படிப்பறியேன் பாடலா' அல்லது 'கண்ணாளனே' பாடலா என்று அடுக்கி கொண்டே போகலாம். சித்ரா என்றாலே அவரது புன்னகை சிந்தும் முகமே ரசிகர்களின் கண் முன் தோன்றுகிறது.

இந்தியாவின் திருவனந்தபுரத்தில் 1963 ஆம் ஆண்டில் ஜூலை 27இல் பிறந்தார். சிறு வயதிலே பாடல்களை பாடி அபரிதமான திறமை படைத்தவராக திகழ்ந்தார்.

ஒரு முழு நேரப் பின்னணி பாடகியாவோம் என்று கனவிலும் தான் நினைக்கவில்லை என்று ரைக்கிறார் சித்ரா. பள்ளியிறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபொழுது அவர் கே.ஜே.யேசுதாஸ் அவர்களுடன் இணைந்து பாடும் வாய்ப்பைப் பெற்றார். பின்னர் இளையராஜாவின் இசையமைப்பில் "நீ தானா அந்தக்குயில்" என்ற திரைப்படத்தில் அவர் பாடிய "பூஜைக்கேத்த பூவிது" என்ற பாடலும், "கண்ணான கண்ணா உன்னை என்ன சொல்லி தாலாட்ட" என்ற இரு பாடல்களும் அவருக்கு புதிய இசையுலகிற்கு திறவுகோலாக அமைந்தன.

அறிமுகப்படுத்தப்பட்ட அதே ஆண்டு ரசிகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட "நானொரு சிந்து காவடிச்சிந்து", "பாடறியேன் படிப்பறியேன்" போன்ற பாடல்களை சிந்து பைரவியில் மிகச் சிறப்பாகப் பாடி தேசிய விருதைப் பெற்றார்.

எஸ்.பி.பி., மனோ, ஜெயச்சந்திரன், ஹரிஹரன், உன்னி கிருஷ்ணன், உன்னிமேனன் போன்ற பாடகர்களுடன் சேர்ந்து பல பாடல்களை பாடி உள்ளார். 12000 பாடல்களுக்கு மேல் பாடிய சித்ரா எஸ்.பி.பி.சரண், விஜய்யேசுதாஸ் முதலிய அடுத்த தலை முறை பாடகர்களுடனும் பாடுகிறார்.

பல இசை அமைப்பாளர்களின் இசையில் பாடியுள்ள சித்ரா ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் "புத்தம் புது பூமி வேண்டும்", "என் மேல் விழுந்த மழைத் துளியே", "தென் கிழக்குச் சீமையிலே", "கண்ணாளனே", ஊ லலலா, எங்கே எனது கவிதை போன்ற பல வெற்றிப்பாடல்களை பாடி உள்ளார்.

இவரின் சாதனைகள் எண்ணற்றவை. விருதுகள் எண்ணற்றவை. தமிழ் நாடு, கர்நாடகா, கேரளா, ஆந்திரா என்ற நான்கு மாநில விருதுகளையும் பெற்ற ஒரே பின்னணிப்பாடகி இவர் தான். ஆறு முறை ஆந்திர மாநில நந்தி விருதுகளையும், இரண்டு முறை கர்நாடக மாநில விருதுகளையும், நான்கு முறை தமிழ் நாடு மாநில விருதுகளையும் பெற்று விருதுகளுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

1995 ஆம் ஆண்டில் அவருக்கு கலைமாமணி விருது கிடைத்தது. எல்லோரும் தேசிய விருதுக்கு ஏங்குகிறார்கள். ஆனால், சித்ராவுக்கு ஆறு முறை தேசிய விருது கிடைத்திருக்கிறது. விராசத் ஹிந்தி படத்தில் ஒரு பாடலை பாடியதன் மூலம் சித்ரா தென்னிந்தியப் பின்னணியில் இருந்து ஹிந்தி மொழியில் பாடி தேசிய விருது பெற்ற முதல் பாடகி என்ற சிறப்பைப் பெற்றார். அப்துல் கலாம் அவர்களிடமிருந்து "பத்மஸ்ரீ" விருது கூட பெற்று உள்ளார் சித்ரா.

எல்லோர் மனதையும் தனது வசீகர குர லால் இழுத்த சித்ரா என்றும் ரசிகர்களின் மனதில் இடம்பிடித்து இருப்பார். இன்னும் வாய்ப்புகள் வரும் போது பாடல்களை பாடி கொண்டு இருக்க வேண்டும் என்பதே ரசிகர்களின் அவா.



## இலக்கிய முற்றம்

# அறிவை வளர்க்கும் விடுகதைகள்!

**வி**டுகதை என்பது விடுவிக்கப்பட வேண்டிய கதை எனப்பொருள்படும் ஒருவகை இலக்கியமாகும். நாட்டுப்புறப்பாடல்களில் கிராமப்புற மக்களின் சிந்தனைக்கு ஒரு பயிற்சியாகவும்அறிவுக்கு உரைகல்லாகவும் சிந்தனைகளின் தூண்டுகோலாகவும் விடுகதைகள் நிலவி வருகின்றன. தற்கால இலக்கிய வகையில் குழந்தைப்பாடல்கள் பல்வேறு அறிஞர்கள் பார்வையில் ஆய்வுக்கு உட்பட்டு வருகின்றது

விடுகதையானது நாட்டுப்புற இலக்கியங்களில் தனக்கெனத் தனியிடம் பெற்றுத் திகழ்வதால் இது கிராம மக்களின் செல்வாக்குப் பெற்ற இலக்கியவகை எனலாம். இலக்கியத்தில் இதனைப் புதிர் என்று அழைப்பர். இதனைத் தொல்காப்பியர் பிசி என்று குறிப்பிடுகின்றார்.

### விடுகதைகளின் இயல்பு:-

குழந்தைகளுக்கு அறிவு புகட்டும் வாயிலாகச் செயல்பட்டு வருவதாலும் பெரும்பாலும் பயின்று பாதுகாக்கப்பட்டு வருவதாலும் விடுகதைகளைக் குழந்தை இலக்கியத்தின் ஒரு பகுதியாகக் எடுத்துக் கொள்ளலாம்.


எனவே விடுகதைகளில் குழந்தைகளுக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தவும் குழந்தைகளின் அறிவு வளத்தை அதிகரிக்கவும் உதவுகிறது அதிலும் சில அறிவியல் உண்மைகள் இருப்பதை நன்கு உணர முடிகிறது.

### விடுகதையின் வகைகள்:-

விடுகதைப் பாடல்களில் சில சொல் விளையாட்டு முறையில் அமைந்துள்ளன. குழந்தைகளுக்குப் பொழுது போக்காகவும் அமைந்து மேலும் சிந்தனைத் திறன்களை வளர்க்கும் முறையில் உள்ளது.

விடுகதையின் வடிவங்கள் பல. பெரும்பாலான விடுகதைகளின் தன்மைகளை நோக்கின் அவை ஓசை நயம் உள்ள கவிதைகள் போலக் காணப்படுகின்றன.

எனவே குழந்தைகளின் அறிவை வளர்ப்பதும் சிந்தனைகளை ஊக்குவிப்பதும் ஒரு கருத்தை மற்றொரு கருத்தோடு ஒப்பு நோக்குவதையும் கற்பனை ஆற்றலை வளர்ப்பதும், குழந்தைகளைச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பேசும் ஆற்றலை உருவாக்குவதும் விடுகதைகளின் தலையாய பணியாக அமைந்துள்ளது எனலாம் குழந்தைகளுக்கு மட்டுமின்றிப் பெரியவர்களுக்கும் கூட பொழுதை இனிதாக மாற்றும் திறன் கொண்டவை விடுகதைப் பாடல்களாகும்.




# சீக்கிரமே படியுங்கள்

வாழ்க்கை ஜனனம் முதலே நமக்கு நிறைய கற்றுத் தர ஆரம்பிக்கின்றது. படிக்க மனமில்லாமல் பள்ளி செல்லும் மாணவன் போல நம்மில் அதிகம் பேர் அதை ஒழுங்காகப் படிக்கத் தவறி விடுகிறோம். படித்துப் பாஸ் ஆகும் வரை நாம் திரும்பத் திரும்ப ஒரே பாடத்தைப் பல முறை படிக்க நேரிடுகிறது. நாம் சலித்துக் கொள்கிறோமே ஒழிய அப்போதும் படித்துத் தேற முயல்வதில்லை. என்ன உபத்திரவம் என்று சலித்துக் கொள்கிறோமே ஒழிய அப்போதும் ஒரு உண்மையை நாம் உணர்வதில்லை. படிப்பினைகளைக் கற்றுக் கொள்ளும் வரை வரலாறு மட்டுமல்ல, வாழ்க்கையும் தான் திரும்பத் திரும்ப ஒரே வித அனுபவத்தைத் தந்து கொண்டே இருக்கிறது.

ஜனனத்தில் ஆரம்பித்து மரணம் வரை கிடைக்கும் பாடங்களை யார் விரைவாகக் கற்றுத் தேறுகிறானோ அவனே வெற்றிவாகை சூடுகிறான். அவனே வாழ்க்கையில் நிறைவைக் காண்கிறான். அவனே கால மணலில் தன் காலடித் தடத்தை நிரந்தரமாக விட்டுச் செல்கிறான். மற்றவர்கள் புலம்பி வாழ்ந்து மடியும் போது அவன் மட்டுமே வாழ்க்கையை ரசித்து திருப்தியுடன் விடை பெறுகிறான்.

இந்த வாழ்க்கைப் பள்ளிக் கூடத்தில் ஒரு பிரத்தியேக வசதி இருக்கிறது. நாம் அடுத்தவர் பாடத்தையும் படித்துத் தேர்ந்து விடலாம். அப்படித் தேர்ந்து விட்டால், ஒழுங்காகக் கற்றுக் கொண்டு விட்டால் நாம் அந்தப் பாடத்தைத் தனியாகப் படித்துப் பாடுபட வேண்டியதில்லை.

உதாரணத்திற்கு ஒரு சாலையில் ஒரு குழி இருக்கிறது. திடீர் என்று பார்த்தால் அது தெரியாது. அந்தக் குழியைப் பற்றித் தெரிந்து கொள்ள நாம் அதில் விழுந்து எழுந்து தான்



ஆக வேண்டும் என்பதில்லை. நமக்கு முன்னால் போகும் ஒருவர் அதில் விழுந்ததைப் பார்த்தாலே போதும் பின் எப்போது அந்தப் பாதையில் போகும் போதும் சர்வ ஜாக்கிரதை நமக்குத் தானாக வந்து விடும். இந்தப் பாதையில் இந்த இடத்தில் ஒரு அபாயமான குழி இருக்கிறது. கவனமாகப் போக வேண்டும் என்ற பாடம் தானாக மனதில் பதிந்து விடும். இனி எந்த நாளும் அந்தக் குழி நமக்கு பிரச்சினை அல்ல.

ஆனால், 'நான் அடுத்தவர் விழுவதைப் பார்த்தாலும் கற்றுக் கொள்ள மாட்டேன், நானே விழுந்தால் தான் எனக்குப் புரியும்' என்று சொல்லும் நபர் தானாகப் படிக்க விரும்பும் அறிவுக்குறை வானவர். அவர் விழுந்து எழுந்து தான் கஷ்டப்பட வேண்டும். நானே ஒரு தடவை விழுந்தாலும் அதிலிருந்து கற்றுக் கொள்ளமாட்டேன். ஏனோ அப்படியாகி விட்டது. அடுத்த தடவை அப்படியாக வேண்டும் என்பதில்லை' என்று ஒவ்வொரு தடவையும் அதே குழி அருகில் அலட்சியமாக நடந்து விழுந்து எழும் நபர் முட்டாள். அவர் கஷ்டப்படவே பிறந்தவர்.

இந்தக் குழி உதாரணம் படிக்கையில் இப்படியும் முட்டாள்தனமாக யாராவது இருப்பார்களா என்று நமக்குத் தோன்றலாம். ஆனால் நம்மில் பலரும் அப்படி முட்டாள்களாக இருக்கிறார்கள் என்பதே உண்மை. எத்தனை பேர் சூதாட்டத்தில் பல முறை தாங்கள் சூடுபட்டும் திருந்தாதவர்கள் இருக்கிறார்கள், எத்தனை பேர் பல பேர் சூதினால் சீரழி வதைப் பார்த்த பின்னும் 'எனக்கு அப்படி ஆகாது' என்று நினைத்து திரும்பத் திரும்ப சூதாடி அழிந்து போனவர்கள் இருக்கிறார்கள் என்று யோசித்துப் பாருங்கள் புரியும்.

தீயைத் தொட்டுத் தான் அது சுடும் என்று உணர வேண்டியது இல்லை. அதைத் தொட்டு சுட்டுக் கொண்டவர் களைப் பார்த்தும் நாம் உணர்ந்து கொள்ள முடியும். அப்படி படிப்பது தான் புத்திசாலித்தனம். ஒவ்வொன்றையும் நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வில் அனுபவித்தே கற்க வேண்டும் என்றிருந்தால் நம் வாழ்க்கையின் நீளம் சில பாடங்களுக்கே போதாது. அதில் நிறைய சாதிக்கவும் முடியாது. நம் வாழ்க்கையில் கிடைக்கும் பாடங்களை முதல் தடவையிலேயே ஒழுங்காகப் படிப்பது முக்கியம். அடுத்தவர்கள் அனுபவங்களில் இருந்தும் நிறையவற்றை கூர்மையாகப் பார்த்துக் கற்றுக் கொள்வது புத்திசாலித்தனம்.

வாழ்க்கைப் பள்ளிக்கூடத்திற்குள் ஒரு முறை நுழைந்து விட்ட பின் தப்பிக்க வழியே இல்லை. எனவே, எதையும் புத்திசாலித்தனமாக சீக்கிரமே படித்துத் தேறுங்கள். அதைத் திரும்பத் திரும்ப படிக்க வேண்டி வராது. அந்தப் பாடம் உங்களுக்குப் பாரமாகவும் இருக்காது.

**- என்.கணேசன்**



# மக்களின் தேவைகள் தீரச் செயற்படுவோம்



“தலைநகரில் வாழும் வறுமை கோட்டுக்கு உட்பட்ட தமிழ் மக்கள் மட்டுமின்றி, அனைத்து இன மக்களும் இன்று தமது பல்வேறு தேவை- களை நிறைவு செய்ய முடியாத, நெருக்கடியான சூழ்நிலையிலேயே வாழ்கின்றனர். நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கை செலவு அவர்களுக்கு இந்நிலையை தோற்றிவித்துள்ளது.

“தமக்கு இவ்வாறானதொரு நிலைவரும் போது தாம் வாக்களித்து வெற்றிபெறச்செய்த அரசியல்வாதிகள் தமக்கு உத வுவார்கள் என்ற எண்ணமும் அவர்களிடம் இருந்திருக்கிறது. ஆனால் இன்று இவர்களது எண்ணங்கள் பெரும் ஏமாற்றங்களை சந்தித்துள்ளன. என்னைச் சந்திக்கவரும் பெரும்பாலான மக்கள் இந்தக் குறைபாட்டைதான் தெரிவிக்கின்றனர்.

“எனவே நாமும் ஒரு அரசியல் கட்சியைக் கொண்டிருப்பவர்கள் என்ற நிலையில் இவ்வாறான விமர்சனங்கள் எமக்கு வந்துவிடாது எமது பணிகளை திட்டமிட்ட முறையில் மேற் கொள்ள வேண்டும்”

இவ்வாறு நவோதயம் அமைப்புகளின் தலைவர் எஸ்.கே. கிருக்ஷ்ணா தெரிவித்தார்.


அன்மையில் கட்சிப் பணிமனையில் நடைபெற்ற அமைப்பாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

மக்களின் தனிப்பட்ட தேவைகளைவிட பொதுத் தேவைகள் அதிகளவில் உள்ளன. இந்தத் தேவைகளை நமது அரசியல்வாதிகள் நிறைவு செய்து கொடுக்க தவறிவருகின்றனர். தத்தமது பதவிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளின் ஊடாகத்தானும் அவற்றை அவர்களால் நிறைவுசெய்ய முடியவில்லை. இந்நிலையில், நாம் அவ்வாறான தேவைகளை இனங்கண்டு எம்மால் முடிந்தவரையில் பூர்த்தி செய்து வருகிறோம்.

இதிலும் குறிப்பாக வாராந்தம் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களின் தனிப்பட்ட தேவைகளை அறிந்து நாம் உதவிகளை வழங்கிவருகிறோம்.இவற்றை நீங்கள் அறிவீர்கள் எதிர்காலத்திலும் அச் சேவைகள் எந்தவித தடையுமின்றி தொடர நீங்கள் முழுமையான கவனம் கொண்டு செயற்பட வேண்டும் - என்றார்.





# ANDROID பயன்கள்

நம்மில் பெரும்பாலானோர் ஆன்ட்ராய்டு இயங்குதளம் கொண்ட ஸ்மார்ட்போன்களை பயன்படுத்துகிறோம். அவற்றில் அதிக அளவில் புகைப் படங்கள் மற்றும் வீடியோக்களை சேமித்து வைத்திருப்போம். ஆனால், அவை பெரும்பாலும் அனைவரின் பார்வை யிலும் படும்வகையில் இருக்கும்.

உதாரணத்திற்கு யாராவது நமது போன்களை பயன்படுத்தினால் அவர்களால் நமது ‘பேர்சனல்’ புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களையும் பார்க்க முடியும். இதைத்தடுக்க ஆன்ட்ராய்டில் பல்வேறு அப்ளிகேசன்கள் கிடைக்கின்றன. அவற்றில் சிறந்த சிலவற்றை நாங்கள் உங்களுக்காக தருகிறோம்.





**புகைப்பட மறைப்பான்:**
**(ஹைட் பிக்சர்ஸ் இன் வொலட்)**

நீங்கள் உங்களுடைய புகைப்படங்களை மற்றவர்களின் பார்வையிலிருந்து மறைக்க விரும்பினால் இந்த ஆன்ட்ராய்டு அப்ளிகேசன் சிறப்பானதாக இருக்கும்.

**ஹைட் இட் ப்ரோ:**






இந்த அப்ளிகேசனில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை மிகவும் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளலாம். போலி புகைப்பட பிரதிகளை தேர்வுசெய்து மற்றவர்களின் பார்வைகளை ஏமாற்றலாம். இதிலும் கடவுச்சொல் அமைப்பு உள்ளது. தேவையானவற்றை கடவுச்சொல் கொண்டு பாதுகாக்கலாம்.

**ஹைட் பிக்சர்ஸ்:**

இதுவும் முந்தைய அப்ளிகேஷனை போன்றதே. இதிலும் புகைப்படங்களை கடவுச்சொல் மூலமாக பாதுகாக்கலாம். இதன் சிறப்பம்சம் என்னவெனில்






மொத்த கலரிக்கே கடவுச்சொல் கொடுத்து பாதுகாக்கலாம். மேலும் புகைப்படங்களை பெரிதுபடுத்துதல் மற்றும் திருப்புதல் போன்ற செயல்களை செய்வது மிகவும் எளிதானது

**வொலட் ஹைட் எஸ்.எம்.எஸ்., பிக்ச்சர்ஸ், வீடியோ:**

பிரைவசி என்பது மிகவும் முக்கியமானது. இந்த மென்பொருளானது கண்டிப்பாக பாதுகாப்பை உறுதிசெய்யும். எஸ்.எம்.எஸ். மற்றும் புகைப்படங்கள்





ஆகியவற்றை மறைத்து வைப்பதுடன், வீடியோக்கள் மற்றும் அழைப்புகள் செய்த தொகுப்புகளையும் பாதுகாக்கும்.



# நிர்வாணமாக நிற்கப் போகிறோமா?

இலங்கையில் தமிழ் இனம் என்ற ஒன்று இருந்தது, அது தனக்கென ஒரு வரலாறைக் கொண்டிருந்தது, அதன் ஆளுகைக்குள் ஒரு குறித்த பிரதேசம் இருந்து வந்தது, அண்மைக் காலத்தில் அந்த மக்கள் தமக்கென ஒரு நடைமுறை அரசாங்கத்தைப் பேணி வந்திருந்தார்கள் என்பன போன்ற விடயங்களைக் கூறுவதற்கான ஆதாரங்கள் எதுவுமே இல்லாத ஒரு சூழல் படிப்படியாக உருவாகி வருவதையே இப்போது நாம் பார்க்கிறோம்.

தமிழ் இனத்தின் இருப்பை நிராகரித்து விட இலங்கை அரசாங்கங்கள் முயன்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் இனம் தனது இருப்பை முன்னிலும் அதிகமாக நிருபித்த காலம் முடிவடைந்து விட்டது. தற்போது 'எது நடந்தாலும் சரியே' என்கின்ற நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டு விட்டது.

ஓரளவு நம்பிக்கையைத் தரக் கூடியதாகக் கருதப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அக முரண்பாடுகளாலும் புற முரண்பாடுகளாலும் தட்டுத் தடுமாறி அலை கடல் துரும்பாய்த் தத்தளித்து வருகின்றது. அது தமிழ் மக்களைக் கரை சேர்க்குமா, நீரில் அமிழ்ந்து வரும் கட்சி என்ற படகைக் காப்பாற்றுமா என்பது கேள்வியாகவுள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் ஜனநாயகக் குரலாகத் தன்னைக் காட்டிக் கொள்ள முற்பட்ட வேளைகளில் எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தலையில் குட்டி அமர்த்தியோரும் கூடத் தற்போது அக் கட்சியை சகட்டு மேனிக்கு விமர்சித்து வருவதைப் பார்க்கும் போது அழுவதா சிரிப்பதா எனப் புரியவில்லை.

உண்மையில் இன்று விமர்சனத்திற்கு ஆட்பட வேண்டியவர்களை விட்டுவிட்டு, நாய்க்கு எங்கு அடி விழுந்தாலும் அது காலைத் தூக்குவதைப் போன்று, தமிழ் அரசியலில் என்ன நடந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதன் தலைமையையும் பழி சொல்வதே அண்மைக் கால வழக்கமாக மாறியுள்ளது இது காத்திரமான ஒன்றல்ல.

இவ்வாறு தமிழர்கள் தமது பிரதான இலக்கை மறந்தவர்களாக முட்டிமோதிக் கொண்டிருக்கும் போது, இலங்கைத் தீவில் தமிழினம் வாழ்ந்ததற்கான அடையாளத்தையே இல்லாமற் செய்வதில் அரசாங்கம் படிப்படியாக வெற்றி பெற்று வருகின்றது.

அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலான போராட்டத்தின் விளைவாகக் கிட்டிய அற்ப சொற்ப அதிகாரப் பகிர்வான மாகாணசபையைக் கூட 'சட்டம்' என்ற கருவியின் துணையோடு பறித்து விடுவதில் அரசாங்கம் கரிசனமாச் செயல்படுகிறது.

நினைத்ததை நடத்தி முடிப்பதில் வல்லமை பெற்ற மஹிந்த குழுமம், திவிநெகும சட்ட மூலத்தை எப்பாடுபட்டேனும் நிறைவேற்றி விடுவது எனக் கங்கணம் கட்டி நிற்கிறது. அதற்குத் தடையாக யார் வந்தாலும், எது வந்தாலும் - அது இந்தியாவின் அனுசரணையால் உருவான 13 ஆவது திருத்தச் சட்டமாயினும் - அகற்றி விடுவதே அவர்களது பாணி. அதில் ஒரு அங்கமாகவே தற்போது தலைமை நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்மொழியப்பட்டுள்ளது.


மறுபுறம், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் தீய விளைவுகளைச் சுட்டிக்காட்டி அதனை ஒரேயடியாக ஒழித்துவிட வேண்டும் என்ற வாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அத்தகைய கருத்துக்கள் சாதாரண ஆட்களிடம் இருந்து மாத்திரமன்றி அரசாங்கத்திலும் நாட்டிலும் பலம் மிக்க நபர்களிடம் இருந்து வெளிப்பட்டு வருகின்றன.

இத்தகைய சூழலில் தமிழ் மக்கள் பெரிதும் நம்பியிருக்கும் சர்வதேச சமூகம் கண்டன அறிக்கைகளை மாத்திரம் விடுத்துக் கொண்டு தூர நின்று வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளது.

இத்தகைய அபாயகரமான கட்டத்தில் தமிழர்களாகிய நாம் இனியும் பயனுள்ள விதத்தில் எதனையும் சாதிக்காமல் வெறுமனே ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி இறைத்துக் கொண்டு இருக்கப் போகின்றோமா? அல்லது யதார்த்தபூர்வமாகச் சிந்தித்துச் செயற்படப் போகின்றோமா? இருந்த யாவும் போய் தற்போது கோவணம் மாத்திரமே மிஞ்சி இருக்கின்றது. அதனையும் தந்து விட்டு நிர்வாணமாக நிற்கப் போகின்றோமா? நின்று நிதானமாகச் சிந்திப்பதற்கான நேரம் இதுவல்ல. விரைந்து செயற்பட்டால் மாத்திரமே உள்ளதையாவது காப்பாற்றிக் கொள்ள முடியும்.

மறுபுறம், தமிழ் மக்கள் தமது அடிப்படைப் பிரச்சினைகள் என்று இதுவரை கூறி வந்த விடயங்கள் யாவற்றையும் மறந்து, 'மாகாணசபையைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடுவதில்' மற்றொரு அபாயமும் உள்ளது. அதிக நெருக்கடிகளை பல வழிகளிலும் தந்துவிட்டு, திடீரென ஒரு சிறிய நன்மையைச் செய்தால் மனம் ஏனைய கஷ்டங்களை மறந்து விடுவதைப் போன்று, தமிழர்களும் 'அனைத்தையும் மறந்துவிட்டு' மாகாணசபைகளைக் காப்பாற்றப் போராட வேண்டிய நிலைக்கு தற்போதைய அரசு இட்டுச் சென்றுள்ளது. இந்த நேரத்தில் அனைத்தையும்' மறந்துவிட வேண்டும் என்பதே பேரினவாதத்தின் எதிர்பார்ப்பு. எனவே, இது விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டியது தமிழ் மக்களின் பொறுப்பு.

***சண் தவராஜா***



# ஒரு நாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார் சச்சின்!

கிரிக்கெட் போட்டியில் பல சாதனைகளை படைத்து வந்த மாஸ்டர் பிளாஸ்டர் சச்சின் டெண்டுல்கர் ஒருநாள் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக கடந்த மாதம் அறிவித்தார்.

கடந்த 23 ஆண்டுகாலமாக எதிரணி பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த சச்சினை இனிமேல் ஒருநாள் போட்டியில் காணமுடியாது. அவரது இடத்தை நிரப்புவது கடினமே.

ஒருநாள் போட்டியில் ஓய்வு பெறுவது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத்(பி.சி.சி.ஐ.) தலைவர் ஸ்ரீநிவாசனுக்கு கடிதம் எழுதியிருந்தார். அதில் கூறப்பட்டதாவது, ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெற நான் முடிவு செய்துள்ளேன். உலகக் கிண்ணத்தை வென்ற அணியில் இடம் பிடித்ததன் மூலம் எனது கனவு நனவாகியுள்ளது. 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியை முன்னரே தயார் செய்வது அவசியம். சிறந்த எதிர்காலம் அமைய இந்திய அணிக்கு எனது வாழ்த்துகள். எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி இத்தனை ஆண்டுகாலம் எனக்கு ஆதரவும் அன்பும் தந்த ரசிகர்களுக்கு என்றென்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

சர்வதேச அளவில் புகழ்பெற்ற அவுஸ்திரேலியாவின் டொன் பிராட்மேனுக்குப் பிறகு கிரிக்கெட்டில் அதிகம் போற்றப்பட்டவர் சச்சின்.

**மனதின் முடிவு:** கடந்த ஓர் ஆண்டாக தடுமாறி வந்த சச்சின் ஓய்வு பெறவேண்டும் என்று முன்னாள் வீரர்கள் பலர் தொடர்ந்து கருத்து தெரிவித்து வந்தனர். ஆனால், தனது உள்மனம் கூறுகையில்,

போட்டியிலிருந்து நானே ஓய்வு பெற்றுவிடுவேன் என்று சச்சின் கூறியிருந்தார். அது போலவே, நாகபுரியில் நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்குப் பிறகு மும்பை திரும்பிய சச்சின் தனது ஓய்வு குறித்த முடிவை அறிவித்தார்.

இது குறித்து அவருக்கு நெருக்கமான ஒருவர் பி.டி.ஐ. செய்தியாளரிடம் கூறுகையில்,

டெஸ்ட் போட்டிக்குபின் வீடு திரும்பிய சச்சின், தனது செல்போனை ஆஃப் செய்துவிட்டு இது தொடர்பான சிந்தனையில் ஆழ்ந்தார். பின்னர், கடந்த மாதம் 21 ஆம் திகதி இரவு தனது குடும்பம் மற்றும் நெருங்கிய நண்பர்களுக்கும் தொடர்ந்து பி.சி.சி.ஐ. தலைவர் என்.ஸ்ரீனிவாசனிடமும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு தனது ஓய்வு முடிவைத் தெரிவித்துள்ளார் என்று கூறினார்.

அப்போது, டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து செய்தியாளர் கேட்டதற்கு, "அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் தனது செயல்பாட்டைப் பொறுத்தே அது குறித்து சச்சின் முடிவு எடுப்பார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரின் கடைசி டெஸ்ட் சச்சினுக்கு 198ஆவது டெஸ்ட் போட்டியாகும். இத்தொடரை வெற்றிகரமாக முடித்தால் தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்று தனது 200ஆவது டெஸ்ட் போட்டியை நிறைவு செய்வார்" என்று தெரிவித்தார்.

**அறிமுகம்:** 1989ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியே சச்சினின் முதலாவது ஒருநாள் போட்டியாகும். அன்று தொடங்கிய அவரது ஒரு நாள் போட்டி ஆட்டம் தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

இதுவரை 463 ஒருநாள் போட்டிகளில் விளையாடிய சச்சின், 49 சதங்களுடன் 18 ஆயிரத்து 426 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

இதில் ஒரு இரட்டைச் சதமும் அடங்கும். மேலும் 96 அரை சதங்களையும் விளாசியுள்ளார்.

அவரது சராசரி 44.83 ஆகும். துடுப்பாட்டத்தில் மட்டுமின்றி சுழற்பந்து வீச்சிலும் கலக்கிய சச்சின் ஒருநாள் போட்டிகளில் 154 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். இதில் 2 முறை ஐந்து விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இவ்வாண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஆசியக் கோப்பை போட்டியில் பங்களாதேஷுக்கு எதிராக தனது நூறாவது சதத்தை அடித்து சாதனை புரிந்தார். அதே தொடரில் பாகிஸ்தானுக்கு எதிராக விளையாடியதே சச்சினின் கடைசி ஒருநாள் போட்டியாகும்.

2006ஆம் ஆண்டு ஒரே ஒரு இருபது ஓவர் போட்டியில் விளையாடிய சச்சின், அதற்குப் பிறகு அப்போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இப்போது ஒரு நாள் போட்டியிலும் தனது ஓய்வை அறிவித்துள்ளதால், சச்சினை இனிமேல் டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே காணமுடியும்.

# யார் அந்த நான்?

ஆக்கம் என்.கணேசன்



**போல்** ப்ரண்டன் சந்தித்த இன்னொரு சித்தர் விசுத்தானந்தர். அவரது சக்திகள் வித்தியாசமானவை. அவர் எந்த ஒரு பூவின் நறுமணத்தையும் தானிருந்த இடத்தில் ஏற்படுத்த முடிந்தவராக இருந்தார். ஒரு பூதக் கண்ணாடியின் மூலம் ஒரு கைக்குட்டையில் சூரிய ஒளியைக் குவித்து மற்றவர்கள் நினைத்த எந்த நறு மணத்தையும் ஏற்படுத்திக் காட்டினார். போல் ப்ரண்டன் திபெத்தில் மட்டுமே மலரக் கூடிய ஒரு மலரை எண்ண, அவர் அந்த மலரின் நறுமணத்தையும் வரவழைத்துக் காட்டி ஆச்சரியப்படுத்தினார்.

வேறெதாவது சக்திகள் அவரிடம் உள்ளதா என்று அவர்கேட்க விசுத்தானந்தர் ஒரு சிட்டுக் குருவியை அவர் முன்னாலேயே கழுத்தை நெரித்துக் கொன்று இறந்து விட்டது என்பதை உறுதிபடுத்திக் கொள்ளச் சொன்னார். பின் தன் கையிலிருந்த பூதக் கண்ணாடி மூலம் சூரிய ஒளிக்கதிர்களை ஒன்றாகக் குவித்து இறந்த சிட்டுக் குருவி யின் ஒரு கண்ணில் குவித்து மறுபடியும் உயிர்ப்பித்துக் காட்டினார். சிட்டுக் குருவி மறுபடி உயிர்பெற்று அசைந்து நடந்து சிறிது தூரம் பறந்து சென்றதைக் கண்ணால் பார்த்த போல் ப்ரண்டன் பிரமித்துப் போனார்.

அந்த உயிர் பெற்ற பறவை அரை மணி நேரம் வாழ்ந்து பின் இறந்து போனது.

மரணத்தையும் வெல்ல முடிந்த சக்தி படைத்த விசுத்தானந்தர் போல் ப்ரண்டன் இந்தியா வந்த காரணத்தை அறிந்து சொன்னார். "தேடல் ஆத்மார்த்தமாக இருந்தால், தேடுபவர் தயார் நிலையில் இருந்தால் குரு கண்டிப்பாக தென்படுவார். பெரும்பாலான நேரங்களில் தேடுபவர் குருவிற்காகத் தயாராக இருப்பதில்லை எனவே தான் காண்பதில்லை..." என்றார்.

போல் ப்ரண்டனைப் பல இடங்களில் தொடர்ந்த ஒரு மனிதர் "நீங்கள் தேடும் யோகியை நான் காட்டுகிறேன். அவரை எனக்குத் தெரியும்" என்று அடிக்கடி சொல்லி வந்தார். ஆனால் அவர் வார்த்தையில் போல் ப்ரண்டனுக்கு நம்பிக்கை வரவில்லை.

ஆனால் அந்த மனிதர் தொடர்வதை நிறுத்தவில்லை. கடைசியில் போல் ப்ரண்டன் அவர் சொன்ன நபரையும் சந்திப்பதில் தனக்கு நஷ்டமேதும் இல்லை என்று நினைத்து "நீங்கள் சொல்லும் யோகி எங்கிருக்கிறார்?" என்று கேட்க அவர் திருவண்ணாமலையில் இருக்கும் ரமண மகரிஷியைப் பற்றி சொன்னார்.

போல் ப்ரண்டன் ரமண மகரிஷியை சந்திக்கச் சென்றார்.

ரமணாசிரமத்தின் ஒரு சிறிய ஹாலில் ரமண மகரிஷி அமர்ந்திருக்க அவர் முன் சிலர் அமைதியாக அமர்ந்திருந்தனர். ரமண மகரிஷி போல் ப்ரண்டனைப் பார்த்தார். மிகச் சாதாரணமான தோற்றம் கொண்ட ரமண மகரிஷியின் பார்வை சாதாரணமானதாக இருக்கவில்லை. அவர் பார்வை காந்தத் தன்மை கொண்டதாக இருந்தது. போல் ப்ரண்டன் தன் பார்வையை மகரிஷியிடமிருந்து விலக்க முடியாதவராக இருந்தார். திடீரென்று தன் பார்வையை போல் ப்ரண்டனிடமிருந்து விலக்கிக் கொண்டு வெற்றிடத்தைப் பார்க்க ஆரம்பித்தார்.

ஆரம்பத்தில் போல் ப்ரண்டன் தான் புறக்கணிக்கப் பட்டது போல் உணர்ந்தார். அங்கு அமர்ந்திருந்த மற்றவர்களுடன் தானும் உட்கார்ந்து கொண்டார். சிறிது நேரத்தில் ஒருவித அசாதாரண சக்தியலை அவரை ஆட்கொண்டது. தன்னை மகரிஷி புறக்கணித்ததாக எண்ணிய எண்ணம் மெல்ல விலகியது. ரமண மகரிஷி எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாலும் அவருடைய ஞான சக்தி அந்த இட மெல்லாம் வியாபித்திருந்தது போல் ப்ரண்டன் மனதில். ரமண மகரிஷியிடம் கேட்க எண்ணி யிருந்த கேள்விகள் கூட அவர் மனதில் இருந்து தானாக உதிர்ந்தன. வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பேரமை தியை போல் ப்ரண்டன் அந்த இடத்தில் உணர்ந்தார். கேள்விகள் இல்லாத பதில் தேவைப்படாத எதனாலும் பாதிக்கப்படாத ஒரு ஆனந்த நிலையை அனுபவித்தார்.

மற்றவர்கள் காட்டிய அபார சக்திகள் எல்லாம் இந்த அமைதியின் முன் ஒரு பொருட்டாகவே போல் ப்ரண்டனுக்குத் தோன்றவில்லை. தான் தேடி வந்த யோகியை அந்தக் கணமே அடையாளம் கண்டார். அவருடைய தேடல் முடிவுக்கு வந்ததாக அவர் உணர்ந்தார். அங்கேயே சில காலம் தங்கத் தீர்மானித்தார்.

முதல் முதலில் ரமண மகரிஷியிடம் பேச வாய்ப்பு கிடைத்த போது போல் ப்ரண்டன் சொன்னார். 'ஸ்வாமி, நான் மேலை நாட்டுத் தத்துவங்கள் நிறையப் படித்தவன். அவற்றில் உள்ள கருத்துக்களை ஆழமாகத் தனிமையில் சிந்தித்தவன். மேலை நாடுகளின் நகர சொகுசான வாழ்க்கையின் பிடியில் அகப்பட்டு ஆன்மீகத் தேடல்களை மறந்ததும் உண்டு. ஒரு கட்டத்தில் அந்தத் தத்துவங் களில் பல கேள்விகளுக்குப் பதில் இல்லை என்று உணர்ந்து கீழை நாடுகளின் பக்கம் என் கவனம் திரும்பியது." மகரிஷி புரிகிறது என்பது போல் தலையசைத்தார்.

போல் ப்ரண்டன் தயக்கமில்லாமல் தனக்கு மனதில் பட்டதை அப்படியே சொன்னார். "இங்கும் பல தத்துவங்கள், பல சித்தாந்தங்கள், பல வாதங்கள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன.

இதையெல்லாம் கேட்டும் படித்தும் நான் சலித்து விட்டேன். நான் மதவாதி அல்லன். மதங்கள் என்ன சொல்கின்றன என்பதை அறிவதும் என் நோக்கமல்ல. நம் கண்ணிற்குத் தெரிகிற இந்த மனித வாழ்க்கைக்கு அப்பாலும் ஏதாவது இருக்கிறதா? இருந்தால் நான் அதை அடைவது எப்படி?"

அருகிலிருந்த சிலர் போல் ப்ரண்டனுடைய வெளிப்படையான கேள்வியைக் கேட்டு திகைத்தனர். மகரிஷி அவரையே பார்த்தாரே ஒழிய பதிலேதும் சொல்லவில்லை. போல் ப்ரண்டன் தொடர்ந்து தன் கருத்தைச் சொன்னார். "அறிவுக்குப் பெயர் போன எங்கள் விஞ்ஞானிகள் கூட இந்த விஷயத்தைப் பொறுத்தவரை அறிந்தது குறைவு என்று கைவிரித்து விட்டார்கள். உங்கள் புண்ணிய தேசத்தில் இதற்கான பதிலை நான் தேடி வந்திருக்கிறேன். தயவு செய்து சொல்லுங்கள் மெய் ஞானம் பெற நீங்கள் எனக்கு உதவ முடியுமா? இல்லை நான் தேடி வந்ததே வெறும் கானல் நீரா? இதை நான் தெரிந்து கொள்ள விரும்புகி-றேன்"

சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டு மகரிஷி கேட்டார். "நீங்கள் நிறைய முறை "நான்" என்று சொல்லி விட்டீர்கள். எனக்குச் சொல்லுங்கள் "யார் அந்த நான்?"

போல் ப்ரண்டனுக்கு முதலில் விளங்கவில்லை. இதென்ன கேள்வி என்று நினைத்தவர் தன்னைக் கையால் சுட்டிக் காட்டி தன் பெயரைச் சொல்லி இது தான் நான் என்று சொன்னார்.

**"இது உங்கள் உடல். மீண்டும் கேட்கிறேன். "யார் அந்த நான்?"**

போல் ப்ரண்டனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. மகரிஷி சொன்னார். "அந்த நானை அறியுங்கள். உங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் உடனடியாக விடை கிடைக்கும்"

"அதை எப்படி அறிவது"

"உங்களுடைய உண்மைத் தன்மையை ஆழமாக சிந்திப்பதாலும் இடைவிடாத தியானத்தாலும் அறியலாம்" "நான் நிறையவே தியானம் செய்திருக்கிறேன். ஆனால் எந்த முன்னேற்றமும் எனக்குத் தெரியவில்லை" "ஆன்மீக மார்க்கத்தில் முன் னேற்றம் என்பதை எளிதாகக் கண்டு பிடிக்க முடியாது"

"இதில் ஒரு குரு தேவையா?"

"இந்த தேடலுக்குத் தேவையானவற்றை குரு தரலாம். ஆனால் இதை அவரவரே தனிப்பட்ட அனுபவத்தால் தான் உணர முடியும்"

"இதற்கு எவ்வளவு காலம் தேவைப்படும்?"

"இது தனி மனிதர்களின் பக்குவத்தைப் பொறுத்தது. தீப்பிடிக்க வெடிமருந்துக்கு நொடி நேரம் போதும். ஆனால் நிலக்கரிக்குத் தீப்பிடிக்க அதிக நேரம் தேவைப்படுகிறது"

போல் ப்ரண்டன் பல கேள்விகளுக்குப் பின் உலகத்தின் தற்போதைய மோசமான நிலையைப் பற்றிச் சொல்லி உலகின் எதிர்காலத்தைப் பற்றிக் கேட்டார்.

"உலகத்தைப் படைத்தவனுக்கு அதை எப்படி பாதுகாப்பதென்று தெரியும். அந்தப் பாரம் அவனைச் சேர்ந்தது. உங்களுடையதல்ல"

ஆனால் தனி மனிதனுக்கு இருக்கும் பொறுப்புகளைப் பற்றி போல் ப்ரண்டன் சொல்ல மகரிஷி சொன்னார். "நீங்கள் எப்படியோ அப்படியே உலகமும். உங்களை முழுமையாக அறியாமல் உலகத்தை அறிய முற்படுவது பயனற்றது....."

ரமண மகரிஷியைக் கண்டு அவர் காலடியில் சில காலம் தங்கி ஆன்மீக அனுபவத்தை ஆழமாக உணர்ந்த போ ல் ப்ரண்டன் இந்திய தேசத்தில் வந்து தேடியதைக் கண்ட திருப்தியில் தன் நாடு திரும்பினார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த புகழ்பெற்ற தத்துவஞானி போல் ப்ரண்டன் (Paul Brunton) இவர் இந்தியாவிலுள்ள சித்தர்களின் சித்து விளையாட்டுக்களை நேராகக் கண்டு, உணர்ந்து A search in secret India என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். அதிலிருந்து தினமகுடி வாசகர்களுக்காக...

# சலிப்படைந்தால் சாதனையில்லை!



ஒவ்வொரு மகத்தான சாதனைக்குப் பின்னும் கடுமையான, முறையான உழைப்பு இருக்கிறது. சலித்துப் போகாத மனம் இருக்கிறது. இந்த இரண்டும் இல்லாமல் எந்த சிறந்த சாதனையும் நிகழ்ந்து விடுவதில்லை. சாதனைகளைப் பாராட்டுகின்ற மனிதர்கள் சாதித்தவர்களின் திறமைகளைத் தான் பெரும் பாலும் சாதனைகளின் காரணமாக எடுத்துக் கொள்கிறார்கள்.

அதற்கென சலிக்காமல் உழைத்த உழைப்பை அதிகமாக யாரும் கவனத்தில் கொள்வதில்லை. ஏனென்றால் பரிசுகளும் பாராட்டுகளும் குவியும் போது தான் அவர்களைக் கவனிக்கிறோம். புகழ் சேரும் போது தான் சுற்றி ஒரு கூட்டமும் சேர்கிறது. அந்த ஒரு நிலை வரும் வரையில் அவர்கள் உழைக்கும் போது அவர்கள் தனியர்களே. அவர்கள் இருப்பதைக் கூட உலகம் அறியாமலேயே இருந்து விடவும் கூடும்.

திறமை மிக முக்கியம். அது தான் முதல் தேவையும் கூட. திறமை இல்லாவிட்டால் உழைப்பு வீண் தான். ஆனால் திறமை இருந்தும் அதற்காக உழைக்கா விட்டால் திறமையும் வீண் தான். இதற்கு எத்தனையோ உதாரணங்களை நாம் நம்மைச் சுற்றியும் பார்க்கலாம். திறமையும் முக்கியம். உழைப்பும் முக்கியம் என்றாலும் எது எந்த அளவு முக்கியம் என்ற கேள்விக்கு விஞ்ஞானி எடிசன் '1 வீத திறமையும் 99வீத உழைப்பும்' வெற்றிக்குத் தேவை என்கிறார். இந்தக் கேள் விக்குப் பதில் அளிக்க ஆயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் புரிந்த அவரைக் காட்டிலும் பொருத்தமான வேறு நபர் இருக்க முடியாது என்பதால் அதை வெற்றிக்கான சூத்திரமாகவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

உலக வரலாற்றில் இரண்டு துறைகளில் நோபல் பரிசுகள் பெற்றவர்கள் இருவர். அதில் முதலாமவர் மேரி கியூரி அம்மையார். இயற்பி யல், வேதியியல் என்ற இரண்டு துறைகளில் 1903, 1911 ஆம் ஆண்டுகளில் அவர் நோபல் பரிசுகள் பெற்றார். வேதியியலில் நோபல் பரிசு கிடைக்கக் காரணமாக இருந்த ரேடியத்தைக் கண்டுபிடிக்க அவர் உழைத்த உழைப்பு கொஞ்ச நஞ்சமல்ல. அவருக்கு ஆராய்ச்சிக் கேற்ற வசதிகளை செய்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கவில்லை. குதிரை லாயமே அவரது ஆராய்ச்சி சாலையாக அமைக்கப்பட்டது.

பொருளை அரைப்பது, கழுவுவது, அடுப்பு மூட்டி சூடாக்குவது போன்ற சில்லறை வேலை களைச் செய்யக்கூட வேலையாட்கள் இல்லை. அந்த வேலைகளை அவரே தான் செய்தார். கனிமத்தை அரைக்கும் எந்திரத்தைச் செக்குமாடுகள் போல அவரே இழுத்து அரைத்தார். இப்படி ஒரு நாள், இரு நாளில்லை பல ஆண்டு காலம் பல துன்பங்களை ஏற்று உழைத்துத் தான் ரேடியத்தை அவர் கண்டுபிடித்தார்.

இப்படி ஒவ்வொரு உண்மையான உயர்ந்த சாதனையின் பின்னும் பெரும் உழைப்பு இருக்கிறது. வெற்றிக்கான முயற்சிகளில் பல சமயங்களில் செய்ததையே தொடர்ந்து பல காலம் செய்ய வேண்டி இருக்கும். அந்த உழைப்பு சுவாரசியமானதாக இருப்பது மிக அபூர்வம். எடிசன் குறிப்பிட்ட 1வீத திறமை இருப்பவர்கள் ஏராளம்.





ஆனால், அந்த 99வீத உழைப்பு என்று வரும் போது தான் பல திறமையுள்ளவர்கள் பின் வாங்கி விடுகிறார்கள். அவர்களுக்கு தொடர்ந்து ஒரே மாதிரியான உழைப்பில் சலிப்பு ஏற்பட்டு விடுகிறது. ஒருசில முயற்சிகளில் பலன் கிடைத்து விட வேண்டும் என்கிற எண்ணம் இருந்தால் சாதனை என்பது என்றுமே சாத்தியமில்லை.

தென்னாப்பிரிக்காவில் பல்லாயிரக்கணக்கான ஆட்கள் சுரங்கத்தைத் தோண்டி வைரத்தை வெட்டி எடுக்கிறார்கள். பல டன் எடையுள்ள மண்ணைத் தோண்டி அப்புறப்படுத்தும் போது தான் அதில் சிறிய வைரத்துண்டு கிடைக்கிறது. தோண்டி எடுப்ப தில் வைரத்தை விட மண் தான் அதிகமாகக் கிடைக்கிறது என்று சலிப்படைவதில் அர்த்த மில்லை. அப்படிக் கிடைப்பது தான் நியதி.

எனவே, நாம் அதை எதிர்பார்த்தே அது போன்ற வேலையில் ஈடுபட வேண்டுமே ஒழிய நமக்கு மட்டும் விதிவிலக்கு வேண்டும் என்ற பேராசையில் முயற்சிகள் மேற்கொண்டால் பெருத்த ஏமாற்றத் தையே அடைய நேரிடும்.

பரிசு வாங்கும் நிகழ்ச்சி போல பயிற்சி செய்யும் நேரங்களும் சுவாரசியமாக இருப்பதில்லை. ஆனால், பெரிய சாதனை புரிந்த அத்தனை பேரின் பயிற்சி நேரங்கள் சாதாரண மக்களின் கற்பனைக் கெட்டாத அளவில் இருக்கின்றன. பலரும் கேளிக் கைகளிலும் பொழுது போக்குகளிலும் ஈடுபட்டிருக் கையிலும் பலரும் உறங்கிக் கொண்டிருக்கையிலும் சாதிக்க நினைப்பவன் தன் சாதனைக்காக விடாமல் உழைக்க வேண்டி இருக்கிறது.

பல நேரங்களில் சாதனையாளர்கள் சாதனைகளைச் செய்வதைப் பார்க்கையில் அவர்கள் அலட் டிக் கொள்ளாமல், சிறிதும் கஷ்டப்படாமல், அனா யாசமாகச் செய்கிறது போல் தோன்றலாம். ஆனால், அந்த நிலையை அடைய அவர்கள் எந்த அளவு உழைப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அவர்களைக் கேட்டால் தான் தெரியும்.

பிரிட்ஸ் கிரீஸ்லர் என்ற பிரபல வயலின் மேதை சிறிதும் பிசிறில்லாமல் மிக மிகச் சிறப்பாக ஒரு நிகழ்ச்சியில் வயலின் வாசிப்பதைக் கேட்டு பிரமித்துப் போன ஒரு இளைஞன் சொன்னான். "இப்படி வாசிக்க வாழ்நாளையே தந்து விடலாம்". அந்த இசை மேதை அமைதியாகச் சொன்னார். "அப்படித் தான் தந்திருக்கிறேன் இளைஞனே". அப்படிப்பட்ட ஒரு இசையைத் தர அவர் வாழ்நாள் முழுவதும் உழைத்திருக்கிறார். ஒரு சாதனையைக் காண்கையில் புத்துணர்ச்சி பெற்று அப்படியே சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் பலருக்கும் வருகிறது. அந்த ஆரம்பப் புத்து ணர்ச்சியைக் கடைசி வரை தக்க வைத்துக் கொள் வது என்பது வெகுசிலராலேயே முடிகிறது. அந்த வெகுசிலராலேயே சாதனை புரிய முடிகிறது.

எனவே, எந்தத் துறையில் சாதிக்க ஆசைப்பட்டாலும் முதலில் அதற்கான திறமை உங்களிடம் இருக்கிறதா என்று பாருங்கள். அந்தத் திறமை இருக்குமானால் அதை மெருகேற்றவும் வெளிக் கொணரவும் முறையான திட்டமிட்ட உழைப்பைத் தர மனதளவில் உங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

மனம் தயாராகா விட்டால் எந்த முயற்சியும் அரை குறையாகவே முடியும். சாதனையின் உயரத் திற்கேற்ப பயணிக்கும் தூரமும் நேரமும் அதிகமாகத் தான் இருக்கும். அந்தப் பயணத்தில் சலிப் படைந்து விடாதீர்கள். பாதியில் நிறுத்தி விடாதீர்கள். சாதனைப் பயணத்தில் பாதியில் நிறுத்திய வர்களை யாரும் நினைவு வைத்துக் கொள்வதில்லை. சலிப்பு வரும் போதெல்லாம் முடிவு நிலையின் பெருமையை எண்ணி உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். தொடர்ந்து முயன்றால் ஒரு நாள் கண்டிப்பாக சாதித்து முடித்திருப்பீர்கள்!

*என்.கே*


நங்கையர் விரும்பும் நவநாகரிக ஆடைகளுக்கு
SPECIALIST IN
Wedding & Home Coming Saree, Shalwar, Gents & Kidswear.
NAIDU MAHAAL
No: 12, W.A.Silva Mawatha, Colombo - 06.
Tel: 011 2588 664, E.mail:naidumahaal@yahoo.com, Web: www.naidumahal.lk



# உலகை உலுக்கிய டில்லி சம்பவம்!

டில்லியில் பல்கலைக்கழக் மாணவி ஒருவர் 6 நபர்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் உலகையே கலங்கடித்திருந்தது.

பஸ்ஸில் பல்கலைக்கழக மாணவியும் அவரது நண்பனும் பயணித்த போது மாணவி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டு வீதியில் தூக்கி வீசப்பட்டார். இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நண்பன் சிகிச்சை முடிந்து வீடுதிரும்பியிருந்தான்.

ஆனால், மாணவியை மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூர் வைத்தியசாலையில் சேர்த்தும் சிகிச்சை பலனின்றி அம் மாணவி உயிரிழந்தார்.

டில்லியில் 23 வயது மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 6 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையின்போது பல திடுக்கிடும் தகவல்கள் தெரிய வந்ததுள்ளன.

மாணவி கடைசிவரை 6 பேருடன் போராடி இருக்கிறார். உடன் சென்ற நண்பர் இரும்பு கம்பியால் அடி வாங்கி மயங்கி விழுந்த நிலையில் தனியாக நின்ற மாணவியால் 6 பேரையும் சமாளிக்க முடியவில்லை. 6 கயவர்களும் தந்திரமாக செயல் பட்டுள்ளனர்.

பஸ் நடத்துனராக வேலை பார்க்கும் சிறுவன் பஸ் படிக்கட்டில் நின்றவாறு பயணிகளை அழைத்து இருக்கிறான். மற்றவர்கள் பயணிகள்போல் நடித்து இருக்கையில் அமர்ந்து இருந்தனர்.



இதனால் மாணவியும் நண்பரும் நம்பிவிட்டனர். ஆனால், பஸ் புறப்பட்டதும் 6 பேரும் ஒன்று சேர்ந்து விட்டனர். அதன் பிறகுதான் மோசம் போய்விட்டோமே என இருவருக்கும் தெரிய வந்தது. இதில் முக்கிய குற்றவாளி பஸ் சாரதி ராம்சிங். இவன் தான் வேறு ஒருவனை பஸ்சை செலுத்த வைத்துவிட்டு மாணவியிடம் தகாத முறையில் நடக்க முயன்றான்.

முதலில் ராம்சிங் மாணவியை பஸ்சின் கடைசி இருக்கைக்கு இழுத்துச் சென்றான். அதை தடுத்த நண்பரை இரும்பு கம்பியால் தலையில் தாக்கினான். அவர் நிலைகுலைந்து விழுந்ததும் மாணவியை அக்ஷய் தாகூரும், சிறுவனும் பிடித்துக் கொள்ள ராம்சிங் பலாத்காரம் செய்ய முயன்றான். 3 பேருடனும் மாணவி போராடினார். 3 பேரையும் கடித்து விரட்டினார். அதன் பிறகு தான் ஆக்ரோஷமானார்கள்.

மிருகத்தனமாக இரும்பு கம்பியால் மாணவியின் வயிற்றில் தாக்கினார்கள். மாணவி கடித்ததில் 3 பேருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. இது இந்த வழக்கில் முக்கிய சாட்சியாக அமைந்துள்ளது. மேலும் மாணவியின் தலைமுடி, இரத்தம் முதலியவையும் 6 குற்றவாளிகளின் நகங்களில் படிந்து இருந்ததையும் பொலிஸார் ஆதாரமாக சேகரித்துள்ளனர்.

மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்து அவரை ரோட்டில் வீசி பஸ்சை ஏற்றி கொல்ல திட்டமிட்டு இருந்தனர். ஆனால், கடைசி நேரத்தில் மயக்கம் தெளிந்து எழுந்த நண்பர் தடுத்ததால் அவர்கள் அந்த முடிவை கைவிட்டு ரோட்டில் தூக்கி வீசி விட்டனர்.

குற்றவாளிகள் 6 பேரும் பஸ்சை வழியில் ஒரு இடத்தில் நிறுத்தி கழுவி விட்டு தடயங்களை அழித்து இருக்கிறார்கள். மேலும் தங்களது உடைகளை தீவைத்து எரித்து விட்டனர். நேரில் பார்த்த 2 பேர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

குற்றவாளிகளின் செல்போன்களும் சிக்கியுள்ளது. அதில் அவர்களுக்கு வந்த 2 அழைப் புக்கள் முக்கிய ஆதாரமாக உள்ளன. பொலிஸார் அதில் தடயவியல் பரிசோதனை உட்பட பல்வேறு ஆய்வுகளை செய்து முடித்து விட்டனர்.



# வைரவிழா காணும் பராசக்தி

சிவாஜி அறிமுகமான பராசக்தி படத்தின் வைர விழாவை ரசிகர்கள் கொண்டாடுகின்றனர். இப்படம் 1952ஆம் ஆண்டு தீபாவளி அன்று வெளியானது. சிவாஜி ஜோடியாக பண்டரிபாய் நடித்தார். எஸ்.எஸ். ராஜேந்திரனும் இப்படத்தில் தான் அறிமுகமானார். கிருஷ்ணன் பஞ்சு இயக்கினார்.

பராசக்தியில் இடம் பெற்ற 'ஒரு பெண்ணின் மனதை தொட்டு போறவரே', 'ஓ ரசிக்கும் சீமானே', 'காகா காகா காக்கை அண்ணாவே நீங்க அழகான வாயால்', 'பூமாலை நீயே புழுதி மண்மேலே' போன்ற இனிமையான பாடல்கள் இடம் பெற்றன.

கருணாநிதி இப்படத்துக்கு வசனம் எழுதியதுடன் முதல் தடவையாக பாடல்களும் எழுதினார். சிவாஜி இப்படத் தில் நடிக்க ரூ.250 சம்பளம் பெற்றார்.

பராசக்தியில் சிவாஜி பேசிய முதல் வசனமே சக்சஸ். இதில் வரும் கோர்ட்டு சீன்கள் அப்போது திரையுலகையே கலக்கின. அந்த வசனங்களைதான் இளம் நடிகர்கள் பேசி சினிமாவில் வாய்ப்பு கேட்பதை வழக்கமாக வைத்து இருந்தார்கள்.

கவிஞர் கண்ணதாசன் நீதிபதியாக திரையில் அறிமுகமான முதல் படமும் இது. தமிழகத்தில் 10 தியேட்டர்களில் 100 நாட்களும் 60 தியேட்டர்களில் 50 நாட்களும் ஓடின. 2593 இருக்கைகள் கொண்ட ஆசியாவின் பெரிய திரையரங்கமான மதுரை தங்கம் தியேட்டரில் முதலில் திரையிடப்பட்ட படம் பராசக்தி. கதை, வசனம் இசை தட்டாகவும் புத்தமாகவும் வந்த சமூக படமும் இதுவாகும். கொழும்பில் 294 நாட்களும், யாழ்ப்பானத்தில் 116 நாட்களும் ஓடி முதல் முதல் வெளி நாட்டில் வெள்ளி விழா கண்ட படம் என்ற பெயரையும் பெற்றது.

பராசக்தி வந்து 60 ஆண்டுகள் ஆவதை தொடர்ந்து வருகிற 6 ஆம் திகதி மதுரையில் இதன் வைர விழாவை ரசிகர்கள் நடத்த உள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.








# ஆடு நனைகிறது என ஓநாய் அழுகிறதா?

ஆடு நனைகிறது என ஓநாய் அழுத கதையாக, வட,கிழக்குமற்றும் மலையக மக்களின் பிரச்சினைகளைப் பேசிக்கொண்டு காலம் கழிக்கிறார். ஜனநாயக கட்சி ஒன்றின் தலைவர்.

இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க அரசியல் சக்திகள் உள்ளன ஆனால் தலைநகரத் தமிழர்களுக்காக குரல்கொடுக்க எவரும் இல்லை. எனவே அவர்களுக்காக குரல் கொடுக்க கட்சி ஒன்று அவசியம் என்பதை முன்நிறுத்தியே இவர் கட்சி ஒன்றை ஆரம்பித்தார்

இந்த சிந்தனையும் செயலும் அவசியம் என உணர்ந்து கொண்ட என்போன்ற சமூக விரும்பிகள் இவரின் நடிப்பாற்றல் தெரியாமல் இவரின் கரத்தை பலப்படுத்த விரும்பினோம். இவருடன் இணைந்து வீராப்புப் பேசினோம். போகப் போகத்தான் இவரின் உண்மையான சுயரூபம் தெரிந்தது.

இப்படித் தெரிக்கிறார் சமூக ஆர்வலர் ரவி பிரகாஷ்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்குகளைக் கவர்வதற்காகத் தனித்துவம் பேசி,தலைநகரத் தமிழர்களின வாக்குகளை பெற்றுக் கொண்ட இவர், பதவி நாற்காலியில் அமர்ந்த பின்னர். இந்த மக்களை கைவிட்டு தனது சுயநலன்களுக்காக தமது சகோதர்களை வரிசைப்படுத்த முன் வந்தமை நாம் அறிந்த கதை.

தலைநகரத் தமிழர்களை ஏமாற்றி தனது அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொண்ட இவர் இன்று இலங்கையில் வாழும் முழு தமிழ் சமூகத்திற்கும் தாம் தான் காவலன் எனச் சொல்லிக் கொள்ளும் நடிப்பாற்றலை வெளிக்காட்டி வருகிறார். இவரின் இந்த நடவடிக்கையானது 'மக்களை மடையர்களாக எண்ணிக் கொண்ட சிந்தனையின் வடிவம்" என்பதை தலைநகரத் தமிழர்கள் மறந்துவிடக்கூடாது.



எனவே, தலைநகரில் வாழும் தமிழர்கள் இவர் போன்ற அரசியல் வேடதாரிகளை இனங்கண்டு ஒதுக்க வேண்டியது அவசியமானது. தலைநகரில் வாழும் மக்களுக்கு எந்தவித போதமின்றி சேவை செய்ய கூடிய புதிய வரவு எது என்பதை உணர்ந்து, அறிந்து செயற்பட வேண்டியது அவசியமானது என்றார்.

# முள்ளுசீதா

**தாவரப்பெயர் :-** ANNONA MURICATA.
**தாவரக்குடும்பம் :-** ANNONACEAE.
**வேறு பெயர்கள் :-** GRAVIOLA, SOURSOP, BRAZILIAN-PAW-PAW, GUNABANA. ஆகியன.

**பயனுள்ள பாகங்கள் :-** இலை, பூ, பழம், பட்டை, வேர் மற்றும் விதை முதலியன.

**வளரியல்பு :-** முள்ளுசீதா எல்லாவகை மண்ணிலும் வளரக் கூடியது... இதன் தாயகம் 'CARIBBEAN' மற்றும் மத்திய அமெரிக்கா. இந்தப் பழத்தில் ஒரு அமிலத்தன்மை ஏற்படும் அத னால் இதை 'SOURSOP' என்று ஆங்கிலத்தில் சொல்வார் கள்.

**மருத்துவப் பயன்கள்:-** அமெரிக்காவில் இதை ஆய்வு செய்து புதிய செல்களை உற்பத்தி செய்து கெட்ட நோய் செல்களை அழித்து நல்ல பலன் தரக்கூடியது என கண்டு பிடித்துள்ளார்கள்.. 'கிமோ தெரப்பி' என்னும் சிகிச்சையில் முடி கொட்டுதல் மற்றும் உடல் மெலிதல் போன்றவற்றுக்கு சிகிச்சையாக்கப்படுகிறது. ஆனால், இயற்கையான முள் சீதாவில் அதைவிட புற்று நோய் செல்களைக் கொல்வதில் 10,000 மடங்கு சக்தியுள்ளதாகவும் கண்டுபிடித்துள்ளார்கள்.

இதன் இலைகள் மருத்துவ குணம் இருப்பதால் காயவைத் துப்பதப்படுத்தி தேனீர் போன்ற பான மாக மேல் நாட்டில் அருந்துகிறார்கள். முள்ளு சீதா 12 வகையான புற்று நோய்களைக் குணப் படுத்த வல்லது. அவை புற்று நோய் கட்டிகள், கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் கற்பப்பையில் புற்றுநோய்கள் மார்பகப்புற்று நோய் ஆகிய வற்றைக் குணப்படுத்துகிறது. இரத்த அழுத்தம், குறைவு, அதிகரிப்பு இவைகளையும் குணப்படுத் தும்.

மேலும் ஆஸ்துமா, வயிற்றுப்போக்கு, காய்ச்சல், புண், குடல் புண், புளுகாய்ச்சல், ஈரல் பாதிப்பு, தோல் வியாதிகள், நரம்பு தளர்ச்சி, நடுக்கம், டென்சன், இருத யக்கோளாறு, கிட்னி பாதிப்பு, இருமல், வயிற்றுவலி போன்ற நோய்களையும் இதன் மூலம் குணப்படுத்தலாமாம்.





**மேடம்**

அலைபாயும் மனம் இருக்கும். மனதில் ஏற்படும் பயங்களும், கவலைகளும் மற்ற வேலைகளில் இடையூறுகளை ஏற்படுத்தும். வருமானம் படிப்படியாக உயர்வதால் பழைய கடன்களை சுலபமாக திருப்பிச் செலுத்துவீர்கள்.



# உங்களது ரெனிங்பொயின்ட் எது?

**அ**நேகமாக நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கை யிலும் ஒன்றிரண்டு 'ரெனிங் பொயின்ட்கள்' நிச்சயம் இருக்கும். தினமும் ஒரேமாதிரி பிழைப்பு ஓடிக்கொண்டிருக்கும். திடீரென்று ஒருநாள் யாரா வது நமக்கு ஒரு நல்ல அறிவுரையைச் சொல்லியி ருப்பார்கள். அதைப் பின்பற்றி நடந்தவுடன் நம்மு டைய உலகமே தலைகீழாக மாறியிருக்கும். இல் லையா? இந்த விஷயம் நமக்கு மட்டுமில்லை, பெரிய நட்சத்திரங்கள், பிரபலங்கள், வெற்றியாளர் கள், சாதனையாளர்கள் எல்லோருக்கும் பொருந் தும்.

அவர்களுடைய வெற்றிப் பயணத்தையும் ஒரு சின்ன அறிவுரை திசைமாற்றியிருக்கும். அமெரிக்கா வைச் சேர்ந்த தொலைக்காட்சிப் பிரபலம் கேட்டி கௌரிக். அவருக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றியது "இதுபோல் பல துறைகளில் பெரிய அளவில் ஜெயித்தவர் களைச் சந்தித்து அவர்களுடைய வாழ்க் கையில் கிடைத்த மிகப் பெரிய அறிவுரை எது? ஏன்? என்றெல் லாம் கேட்டுத் தெரிந் துகொண்டால் எப்படி இருக்கும்?" கேட்டி யின் இந்த திடீர் சந் தேகம் ஒரு சுவாரஸ்ய மான புத்தகமாக மலர்ந் திருக்கிறது.

சமீபத்தில் வெளியாகி சூப்பர் ஹிட்டாகியிருக்கும் அந்தப் புத்தகத்தின் பெயர் "தி பெஸ்ட் அட் வைஸ் ஐ எவர் கொட" (The Best Advice I Ever Got).

பில் கிளின்டன், கொண்டலீஸா ரைஸ், இந் திரா நூயி, ஸ்டீவன் ஸ்பீல் பெர்க், சல் மான் ருஷ்டி,பில் கேட்ஸின் மனைவி மெலிண்டா கேட்ஸ், மனோஜ் நைட்ஷ்யா மளன் உள்ளிட்ட பல்வேறு பிரபலங் கள் தங்களுக் குக் கிடைத்த மிக நல்ல அறி- வுரைகள், ஆலோச னைகள், அனுபவங்களை இதில் பதிவு செய் துள்ளார்கள்.

இந்தப் புத்தகத்தின் தனிச்சிறப்பு, எந்தக் கட்டு ரையும் இரண்டு அல்லது மூன்று பக்கங்களைத் தாண்டுவதில்லை. சின்னச் சின்ன டிப்ஸ்கள் சுலப மாக மனதில் பதிகின்றன, பயன்படுத்துவதற்கும் எளிதாக இருக்கின்றன.பல பிரபலங்கள் வழங்கிய இந்த பிராக்டிகல் அட்வைஸ் மழையிலிருந்து, உங் களுக்காகச் சில துளிகள் இங்கே.

* வாழ்க்கை என்பது சமையல் குறிப்பு அல்ல. இதற்குப் பிறகு இதைச் செய்யவேண்டும், இவ்வ ளவு நேரம் செய்ய வேண்டும் என்றெல்லாம் யாரும் விதிமுறை போட்டுவைக்கவில்லை. நீங் கள் எந்தக் கட்டாயங்களையும் பின்பற்றவேண்டி யதில்லை. ரிலாக்ஸ், ஒவ்வொரு கணத்தையும் ரசித்து அனுபவியுங்கள், வாழ்க்கையின் போக்கில் மிதந்து செல்லுங்கள்.
* உங்களுக்கு ஒரு விஷயம் தேவை என் றால் அதை நேரடியாகக் கேட்கத் தயங்காதீர் கள். அப்படிக் கேட்டால் மற்றவர்கள் என்ன நினைப் பார்களோ என்று யோசித்தால், கூச்சப்பட் டால் வேலை நடக்காது.
* நீங்கள் எதைப் பார்த்துப் பயப்படுகிறீர்கள்? ஏன்? இந்த விஷயத்தை நீங்களே கூர்மையாக ஆராய்ந்து பாருங்கள். அதனைத் தாண்டுங்கள்.
* அதற்காக, "நான் பயமே இல்லாமல் வாழ்வேன்" என்று ஆரம்பித்துவிடாதீர்கள். பயம் நல்லது. பல சமயங்களில் அதுதான் உங்களைச் சரியான பாதையில் நகர்த்திச்செல்கிறது.
* பிரச்சினைகளைப் பார்த்துப் பயப்படாதீர் கள்,அவை மாறுவேஷத்தில் வரும் வாய்ப்புகள்!
* முயற்சி தவறிவிட்டதா? சறுக்கிக் கீழே விழுந்து விட்டீர்களா? தப்பில்லை, மறுபடி எழுந்து நிற்கா விட்டால்தான் தப்பு.
* எனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்குது? என்று புலம்பாதீர்கள். எல்லோருக்கும் அப்படித் தான் நடக்கிறது. டென்ஷனை விட்டு முன்னே போகிற வழியைத் தேடுங்கள்.
* எது சுலபமாக இருக்கிறதோ அதைச் செய்யாதீர் கள், எது சரியோ அதைச் செய்யுங்கள்.

# பூமியை கடந்து சென்ற கிரகம்!

2012 இல் உலகம் அழிந்துவிடும் என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் பெரிய கிரகம் ஒன்று டிசம்பர் 12 ஆம் திகதி பூமிக்குச் சமீபமாக பயணித்துள் ளது. அதன் மூலம் பூமிக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்பட்டிருக்கவில்லை என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

நாஸா நிறுவனத்தின் விஞ்ஞானிகள் தெரிவிப்பதற்கமைய டுட்டாடிஸ் 4179 என்ற அந்தக் கிரகம் பூமிக்கு 7 மில்லியன் கிலோ மீற்றர் தொலை விலேயே பயணித்துள்ளது.

இந்தக் கிரகம் பூமியில் மோதுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் நாஸா முன்கூட்டியே உறுதி வழங்கியிருந்தது.



கிரகத்துடன் பயணித்து வந்த அதன் உடைந்துபோன சிறு துண்டங்கள், வால் நட்சத்திரங்கள் போன்று பூமியை நோக்கிக் கீழ் இறங்கியுள்ளன.

அவை பிரகாசமாகக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த உடைந்த துண்டங்கள் பூமியின் வாயு மண்டலத்தினுள் சென்ற போது தீப்பற்றிக் கொண்டதன் காரணமாக பிரகாசமாகக் காணப்பட்டுள்ளன.

டுட்டாடிஸ் 4179 கிரகம் பூமிக்குச் சமீபமாகப் பணித்துச் சென்ற விதத்தை நாஸா நிறுவனம் புகைப்படம் எடுத்துள்ளது.



அதை நேரடியாக சர்வதேச இணையத்தளம் ஊடாகப் பார்ப்பதற்கான வசதிகளையும் நாஸா நிறுவனம் ஏற்படுத்தியிருந்தது. நாஸா நிறுவனம் தெரிவிப்பதற்குகமைய, கெனேரிதீவு வாசிகளுக்கே இந்தக் கிரகத்தைத் தெளி வாகக் காணும் அதிர்ஷ்டம் கிட்டியிருந்தமை குறிப்பிடத் தக்கது.






**இடபம்**

குடும்பத்தில் குதூகலம் நிறையும். பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பிறரைச் சார்ந்து வாழ்ந்தவர்கள் தனித்து காரியமாற்றும் நிலை உண்டாகும். உங்களின் வசீகரமான பேச்சினால் பிறரைக் கவர்வீர்கள்.



# ஆச்சரியமூட்டும் வரைபடம்



பிரிரெய்ஸ் என்பவரால் பிரதி எடுக்கப்பட்ட வரைபடம் இது. இது மான்தோளில் வரையப்பட்ட ஒன்றாகும். பிரிரெய்ஸ் 16 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் துரு க்கி கடற்படையில் சக்தி வாய் ந்த அட் மிரல் பதவியில் இருந் தவர். வரைபட இயலில் பேரார் வம் உடையவர் காண் ஸ்டான் டிநோ பிலில் உள்ள இம்பீரியல் நூல கத்தில் சுதந் திரமான அனுமதி இவருக்கு தரப்பட்டிருந் தது. கிபி 4 ஆம் நூற்றாண்டு மற்றும் அதற்கு முந்திய காலகட்டத்தை சார்ந்ததாக கருதப்படும் வரைபடங்களில் இருந்து அச்சு அசல் நகல்களை படி எடுத்தார்.

இதில் ஆப்பிரிக்காவின் மேற்கு கடற்கரைப் பகுதி, தென்அமெரிக்காவின் கிழக்கு கடற்கரைப் பகுதி மற்றும் அண்டார்டிகாவின் வட கடற் கரைப்பகுதி தெளிவாக அடையாளம் காண முடிந்தது. முக்கியமாக வட அண்டார்டிகா கடற் கரைப்பகுதி தெளிவாக புரிந்து கொள்ளக்கூடிய வகையில் தெளிவாக இருந்தது. இந்த இடத் தில் தான் பிரச்சினைக்குரிய பல குழப்ப முடிவு கள் ஆராய்ச்சி முடிவுகளுக்கு உட்பட்டது.

பிரிரெய்ஸ் 'கிராபி பாக்ரியே' [Kitabi Bahriye] எனும் பயணப்புத்தகம் எழுதியிருக்கிறார் இதில் கடற்கரை அமைவுகள், குடாக்கள், துறை முகங்கள், நீரோட்டங்கள், கணவாய்கள் குறித்த தகவல்கள் காணப்படுகின்றன.

கிடைத்த புவியியல் ஆதாரங்களில் இருந்து குயின் மௌவுடலண்ட் [Queen Maud Land] எனும் பகுதியில் மூடியிருந்த பனி கட்டிகள் உருக தொடங்கியது கி.மு 4000 வருடங்க ளுக்கு முன்.

ஆதாரப்பூர்வமான செய்தி என்னவென்றால் அன்டார்டிகா மற்றும் இந்த பனி முனையானது பல மில்லியன் ஆண்டுகள் பனியால் உறைந்து போயிருந்தது அதாவது முழுக்க முழுக்க பனி கட்டி பாளங்களால் மூடியிருந்தது

கொலம்பஸ் 1492 இல் அமெரிக்காவை கண்டு பிடித்தார் எனும் போது அதற்கு முன்பே துல்லி யமாக தென் அமெரிக்க கரைகள் வரையப்பட் டுள்ளது ஆச்சிரியமானது.

1820 வரை அண்டார்டிகா அறியப்படவில்லை ஆனால் பனிமூடிய இதன் கரைகள் துள்ளிய மாக இவரால் வரையப்பட்டுள்ளது எப்படி?


பிரிரெய்ஸ் வரைபடத்தில் வடக்கு கண்டப் பகுதி பனிமூடியதற்கு முன் வரையப்பட்டது அப் படியானால் இது மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வரையப்பட்டதா? இப்படி ஒரு முடிவுக்கு வரமுடியாது அப்போது மனித இனமே இருக்க வாய்ப்பில்லை. இன்னும் தீர்க்கமான ஆய்வுக ளின் படி, பனி உருகிய இறுதி காலம் 6000 வருடங்களுக்கு முன்.

(ஆனால் பனி உருகிய காலம் பற்றி இன்னும் தீர்க்கப்படாத சந்தேகம் உள்ளது. பல ஆராய்சி யாளர்களின் கருத்துப்படி பனி உருகிய காலம் 13000 இருந்து 9000 BC).

அண்டார்டிக்கின் குயின் மௌவுட் நிலப்பகுதி [Queen Maud Land] வரைபடம் 6000 வருடங் களுக்கு முன்னால் வரைந்தது யார் ? அல்லது இனந்தெரியாத எந்த நாகரீகம் இதை வரைந்தி ருக்கலாம் எப்படிபட்ட வரைதல் தொழிற்நுட்பம் இதில் பயன்படுத்தப்பட்டிருக்கும்?

இதுபோன்ற வியப்பான விடைதெரியாத கேள் விகள் அல்லது ரகசியங்கள் தொக்கி நிற்கின் றன. நவீன தொழில் நுட்பத்தில் வரையப்பட்ட வரைப டங்களை போல் எப்படி கி.மு 4000 ஆவது ஆண்டில் தத்ரூபமாக வரையமுடிந்தது? என்பது அறிய முடியாத ரகசியமாக இருக்கிறது அல்லவா?

# மறுத்தார் ரஜினி




ரஜினி படத்தை இயக்கும் திட்டத்தை கைவிட்டுள்ளார் அவரது மூத்த மகள் ஐஸ்வர்யா. தனது கணவர் தனுஷை வைத்து “3” படத்தை இயக்கினார் ரஜினி மகள் ஐஸ்வர்யா. இதையடுத்து ஹிந்தியில் ஹிட்டான “ஓ மை காட்” படத்தை இயக்க அவர் திட்டமிட்டார். இப்படத்தில் கடவுள் வேடத்தில் அக்‘ய்குமார் நடித்திருந்தார். இடைவேளை நேரத்தில்தான் அவரது கேரக்டர் படத்தில் என்ட்ரியாகும். இடைவேளைக்கு பிறகும் அதிக காட்சிகள் கிடையாது. ஆனால், கதையே அந்த கேரக்டரை சுற்றித்தான் நகரும். இந்த வேடத்தில் ரஜினி நடித்தால் நன்றாக இருக்கும் என விரும்பினார் ஐஸ்வர்யா. படத்தை ரீமேக் செய்வது தொடர்பாக மும்பைக்கு சென்று அக்ஷய்குமாருடன் பேசினார். இந்நிலையில் இப்போது திடீரென இப்படத்தை அவர் கைவிடடுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கு காரணம், ரஜினிக்கு இதில் நடிக்க விருப்பம் இல்லாதது தான் என்கிறார்கள். “ஓ மை காட்“ படத்தை பார்த்த ரஜினி, படம் நன்றாக இருப்பதாகவும் ஆனால், இந்த கேரக்டர் தனக்கு பொருந்தாது என்றும் கூறியதாக தெரிகிறது. இதையடுத்து இப்படத்தை ரீமேக் செய்யும் திட்டத்தை ஐஸ்வர்யா கைவிட்டுள்ளார். அடுத்ததாக புதுமுகங்களை வைத்து அவர் படம் இயக்க முடிவு செய்துள்ளாராம்.





**மிதுனம்**

வேலைகளைக் குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிப்பீர்கள். மனதில் இருந்த குழப்பங்கள் அகலும். தியானம் மனதிற்கு நிம்மதி தரும் செய்திகளைக் கேட்பீர்கள். கடினமான உழைப்பிற்குத் தகுந்த பலன் கிடைக்கும்.



# ஓரிதழ் தாமரையும் பயன்களும்

சித்தர்கள், ஞானிகள், ரிஷிகள் தங்களின் தவப் பயனால் இயற்கையின் கொடையான இந்த மூலிகைகள் மனித இனத்தை எப்படி பாதுகாக்கிறது என்பதை கண்டறிந்து சொன் னார்கள்.

பொதுவாக மனிதர்களைத் தாக்கும் 4448 நோய்களை அறிந்து அவற்றை மூலிகைகளைக் கொண்டே குணப்படுத்தும் முறைகளையும் கூறினார்கள். மேலும் நோய்கள் வரும் முன் காக்க இந்த மூலிகைகளின் பயன்களையும் கண்டறிந்தனர். உணவின் மூலம் நோய்கள் தாக்காமல் இருக்கவும் வழி வகை செய்தனர்.

இடைப்பட்ட காலத்தில் மூலிகைகள் மீது நாம் காட்டிவந்த அலட்சியமே இதற்குக் கார ணம் .நம் அருகே பரவிக்கிடக்கும் மூலிகை களை, களை என்று எண்ணி அழித்த நாம் இன்று அவற்றின் பயன்களை உணர்ந்து தேடும் போது அவை நம் கண்ணில் அகப்படுவ தில்லை.

இந்த வகையில் ஓரிதழ் தாமரையின் மருத் துவ குணங்களைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

தாமரை என்றவுடன் நீரில் இருக்கும் என்று நினைத்துவிடாதீர்கள். இது நிலத்தில் வளரும் சிறு செடி வகையாகும் இதன் இலை, தண்டு, பூ, வேர், காய் அனைத்துமே மருத்துவக் குணம் கொண்டவை. இதற்கு இரத்தின புருஷ் என்றும் பெயர் உண்டு.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடி யும் என்ற பழமொழிக்கேற்ப நல்ல ஆரோக்கிய மான உடல் அமைந்தால்தான் நாம் பிறந்ததின் பலனை அனுபவிக்க முடியும்.

சிலர் உடல் நலம் பேணாமல் இரவு, பகல் பாராமல் பொருள் தேடி அலைகின்றனர். அதிக தூக்கமின்மை, நேரத்திற்கு சரியாக உணவு அருந்தாமை போன்ற காரணங்களால் பலரின் உடல் நிலை பாதிக்கப்படுகிறது. மேலும் சில தீய பழக்கங்கள் குடிகொண்டு உடல் என்னும் கோவிலை நாசப்படுத்திவிடுகின்றன.

இத்தகைய பாதிப்புகளிலிருந்து விடுபட ஓரி தழ் தாமரை மிகவும் பயனுள்ள மருந்தாகும். ஓரிதழ் தாமரையின் சமூலத்தை நிழலில் உலர்த்தி காய வைத்து பொடி செய்து பாலில் கலந்து காலை, மாலை என இருவேளையும் அருந்திவந்தால் உடல் வலுப்பெறும். நோயின் தாக்கத்திலிருந்து விடுபட்டவர்களுக்கு உடல் தேற ஓரிதழ் தாமரையின் சமூலம் நல்ல மருந் தாகும். மேகவெட்டை நோயால் பாதிக்கப்பட்ட வர்கள் ஓரிதழ் தாமரை சமூலம், பச்சை கற் பூரம், கோரோசனை இவற்றை சம அளவு எடுத்து இடித்து பசுவின் நெய்யுடன் கலந்து மேகவெட்டை தாக்கிய பகுதிகளில் பூசி வந்தால் மேகவெட்டை தீரும்.

உடலில் உள்ள புண்களின் மீது தடவி வந்தால் புண்கள் விரைவில் ஆறும். சுரக்காய்ச்சலால் அவதியுறுபவர்கள் ஓரிதழ் தாமரையின் சமூலத்தை கசாயம் செய்து அருந்தி வந்தால் சுரக் காய்ச்சல் நீங்கும். இரைப்பு நோய்க்கு இது அருமருந்தாகும்.

உடல் எடை குறைய ஓரிதழ்தாமரை கசாயம் சிறந்தது. இளம் வயது ஆண்பிள்ளைகளுக்கு பருவ வயது வளர்ச்சியின் போது சில பாதிப்புகளால் இரவில் தூங்கும்போது விந்து வெளியேறும். இதனால் தாது நஷ்டப்பட்டு உடல் தேறாமல் நோஞ்சான் போல் காணப்படுவர். இவர்கள் ஓரிதழ் தாமரையின் சமூலத்தை இடித்து தேன் அல்லது பாலில் கலந்து இரவு படுக்கைக்கு செல்லும்முன் சாப்பிட்டு வந்தால் இழந்த தாதுவை மீட்கலாம்.

ஆண்கள் சிலருக்கு உடலில் ஏற்படும் பாதிப்புகளால் உடல் உறவில் நாட்டம் இன்றி இருப்பார்கள். இவர்கள் போலி விளம்பரங்களைக் கண்டு ஏமாந்துவிடுகின்றனர். சிலர் இதனை மறைத்து வைத்து மனவேதனைக்கு ஆளாகி விடுகின்ற னர்.

இவர்கள் ஓரிதழ் தாமரையின் சமூலத்தை (இலை, தண்டு,வேர், பூ, காய்) நிழலில் உலர்த்தி பொடி செய்து பாலில் கலந்து தின மும் இரவு படுக்கைக்குச் செல்லும் முன் அருந்த வேண்டும். இவ்வாறு ஒருமண்டலம் தொடர்ந்து செய்துவந்தால் மேற்கண்ட பிரச்சனையிலிருந்து விரைவில் விடுபடலாம். இதனை காயகல்பமாகச் சாப்பிட்டு வந்தால் உடல் வலுப்பெறும்.





# வாய் துர்நாற்றமா?

**வா**ய் துர்நாற்றமா? வாய் துர் நாற்றத்தால் அவதிப்படுகிறீர்களா? பிறர் நீங்கள் பேசும்போது முகம் சுளிக்கிறார்கள்? இனி கவலையே வேண்டாம். வாய் துர்நாற்றத்தைப் போக்க வைத்தியங்கள் உண்டு. இயற்கை முறையில் வாய்துர்நாற்றத்தை விரட்டி அடித்துவிடலாம்.

**வாய் துர்நாற்றம் ஏன் ஏற்படுகிறது?**

வயிற்றுக் கோளாறு உள்ளவர்கள் நிச்சயம் இந்த வாய் துர்நாற்றம் ஏற்படும். அதாவது அல்சர் (ulcer) நோய் உள்ளவர்கள் வாய் துர் நாற்றத்தால் அவதிப்படுவார்கள். இது வாய்துர்நாற்றம் ஏற்பட முக்கிய காரணங்கள்.

மற்ற காரணங்கள்: புகையிலை, வெற்றிலை, பாக்கு போடுதல், உடலில் நீர்ச்சத்து குறைபாடு.




**மருத்துவ ரீதியான காரணங்கள்:**

தொண்டையில் உள்ள டான்சில் சுரப்பியில் infection ஏற்பட்டால் வாய் துர்நாற்றம் ஏற்படும்.

**உணவுக் குழாய், உணவு மண்டலத்தில் ஏற்படும் வியாதிகள்**

ஒரு வழிப்பாதையான உணவுக் குழாயில் ஒரு சிலருக்கு உணவுப் பையிலிருந்து அமிலமானது மேல்நோக்கி வந்து போகும் இதனாலும் வாய் துர்நாற்றம் ஏற்படும். இதை ஆங்கிலத்தில் Re-flux என்பார்கள்.



அஜீரணக் கோளாறுகளால் வாய் துர்நாற்றம் ஏற்படும். உணவுக்குழாயில் சென்ற உணவானது நான்கு மணி நேரத்திற் குள் ஜீரணமாகிவிடும். நான்கு மணி நேரத் திற்கு மேலும் ஜீரணமாகாமல் உணவுமண் டலத்திலேயே உணவு தங்கும்போது வயிற்றில் ஏற்படும் புளித்த நாற்றம் வாய் வழியாக வந்து சேரும்.

**வாய் துர்நாற்றத்தை போக்க வழிகள் பத்து:**

1. உடனடியாக வாய் துர்நாற்றத்தைப் போக்க நறுமணப்பொருள்களை வாயில் இட்டு மெல்லலாம். தற்போது சூயிங்கம், அழரவா Freshnner ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.
2. (அழரவா washer) நீரமங்களைப் பயன் படுத்தி வாயைச் சுத்தப் படுத்திக்கொள்ளலாம்.
3. வாய் துர்நாற்றம் உள்ளவர்கள் வெற்றிலையை வாயில் அடக்குவதுபோல கிராம்பை மென்று வாயில் அடக்கிக்கொள்ளலாம்.
4. அரை லிட்டர் நீரில் புதினா சாறு (Mint juice), எலுமிச்சை சாறு (Lime juice) ஆகியவற்றைக் கலந்து வாய் கொப்பளிக்கலாம் இதனால் வாய் துர் நாற்றம் நீங்கும்.
5. வாய் துர்நாற்றத்தைப் போக்க எலுமிச்சை சாறுடன் நீர் கலந்து அதில் சிறிதளவு உப்புச் சேர்த்து குடித்து வரலாம். இந்தக் கலவையை வாயிலிட்டு கொப்புளிக்க வாய் துர்நாற்றம் நீங்கும்.
6. குடல்புண் பிரச்சினையால்தான் பெரும்பாலான வாய் துர்நாற்றம் ஏற்படுகிறது. இதைப் போக்க காலையில் எழுந்தவுடன் காப்பியைத் தவிர்த்துவிட்டு 4 டம்ளர் தண்ணீரை வெறும் வயிற்றில் குடிக்கலாம். இதனால் வயிறு சுத்தப்படுவ-தோடு அல்சர் நீங்கி வாய் துர்நாற்றம் ஏற்படுவதும் தவிர்க்கப்படும்.
7. காலை மாலை இரண்டு நேரம் பல் துலக்கி வாய்க்கொப்புளிக்க வாய் துற்நாற்றம் நீங்கும்.
8. வேறு சில காரணங்களாலும் வாயில் துர்நாற்றம் ஏற்படும். நன்றாக துலக்கப் படாத பற்களின் இடுக்குளில் கிருமிகள் சேர்வதால் இந்த துர்நாற்றம் ஏற்படும். எனவே மருத்துவரிடம் ஆலோசனைப் பெற்று பற்களை சுத்தம் செய்துகொள்ளவதன் மூலம் துர்நாற்றத்தை தவிர்க்கலாம். அத்தோடு பற்களின் பாதுகாப்பும் பலப்படும்.
9. அதிக காரம், அதிக புளிப்பு உள்ள உணவு வகைகளை தவிர்ப்பதால் வாய் துர்நாற்றத்தைத் தவிர்க்கலாம்.
10. சாதாரணமாக சந்தையில் கிடைக்கும் கொத்தமல்லிக் கீரையை (Coriander leaves) வாயில் போட்டு மென்றுவர வாய் துர்நாற்றம் நீங்கும்.



**கடகம்** மிகவும் சிறப்பான பலன்களைப் பெற போகிறீர்கள். சிற்சில குழப்பங்கள் வந்தாலும் அதற்காக கவலை கொள்ள வேண்டாம். அனைத்தும் நன்மையே கிடைக்கும். பல்வேறு முன்னேற்றங்களைப் பெறலாம். குறிப்பாக பொருளாதார வளம் அதிகரிக்கும்.

உலக அளவில் திரைத்துறையில் வழங்கப்படும் மிகப்பெரிய விருது 'ஒஸ்கார் விருது'. உலக அளவில் பல பிரிவுகளின் கீழ் படங்களும், திரைக்கலைஞர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடைசியில் ஒருவருக்கே அந்த விருது வழங்கப்படும். இந்தியாவிலிருந்து ஒஸ்கார் விருந்துக்கு படங்களும், திரைக்கலைஞர்களும் தேர்ந்தெடுக்கப்படுவது அரிதிலும் அரிதான ஒன்று.

2008-09 ஆம் ஆண்டுகளில் 'ஸ்லம்டாக் மில்லியனர்' படம் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் ரிலீஸானது. 2009-ஆம் ஆண்டு நடந்த ஆஸ்கார் விருது வழங்கும் விழாவில் மொத்தமாக 8 விருது-களை அள்ளியது ஸ்லம்டாக் மில்லியனர் படம். 8 விருதுகளில் இரண்டு விருதுகளை சிறந்த

# ஏ.ஆர்.ரஹ்மானுக்கு மீண்டும் ஒஸ்கார் விருது?



இசைக்கான பிரிவில் ஏ.ஆர்.ரஹ்மான் தட்டிச் சென்றார்.

அதிலிருந்து ஒஸ்கார் நாயகன் என்று அழைக்கப்பட்டு வந்த ஏ.ஆர்.ரஹ்மான் மறுபடியும் ஒஸ்கார் விருதுக்கான பட்டியலில் இடம்பிடித்துள்ளார். 'தி லிஜண்ட் ஆஃப் சாரோ', 'ட்ரான்ஸ்ஃபார்மர்ஸ்' போன்ற படங்களுக்கு வசனம் எழுதிய அலெக்ஸ் குர்ட்ஸ்மன் இயக்கத்தில் உருவாகியிருக்கும் 'பீபிள் லைக் அஸ்' என்ற படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். சிறந்த இசையமைப்பாளர் பிரிவின் கீழ் ஏ.ஆர்.ரஹ்மானின் பெயர் ஒஸ்காருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.



# பெண்கள் பாராட்டுராங்க

நீதானே என் பொன்வசந்தம்" படத்திற்கு இருவிதமான விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஜீவா, சமந்தா, சந்தானம் நடித்து இருக்கும் இப்படத்தினை கௌதம் மேனன் இயக்க, இளையராஜா இசையமைத்து இருக்கிறார்


படம் குறித்து கௌதம் மேனன் பொதுவாக என் படங்களுக்கு பரவலாக எல்லோருடைய பாராட்டும் கிடைக்கும் என்னுடைய 12 படங்களையும் இரு பாலினரும் ரசித்தாலும், ஆண் ரசிகர்களின் எண்ணிக்கை சற்றே கூடுதலாக இருக்கும்

ஆனால் இது வரை "நீதானே என் பொன்வசந்தம்" படம் பார்த்து விட்டு என்னையும் என் குழுவினரையும் பாராட்டுவோர் பெரும்பாலும் பெண்களாகவே உள்ளனர். அது இப்படத்தின் கதாநாயகி நித்யாவின் கதாபாத்திரத்தை நான் படைக்கும்போதே எதிர்பார்த்ததுதான் என்றாலும் இந்த ஆதரவு என்னை மிகவும் உற்சாகமூட்டுகிறது



**சிம்மம்** காரிய அனுகூலம் கிடைக்கும். மதிப்பு மரியாதை சீராக இருக்கும். வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். தடைப்பட்ட ஆடம்பர பொருட்களை வாங்கலாம். கடந்த காலமாக தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் கைகூடும்.






**கேள்வி: அன்பின் பாம்பாட்டியாரே, எத்தனையோ வியாபாரம் பண்ணிப் பார்த்துப்புட்டேன் ஆனா பணம் கையில் தங்குதேயில்லை என்ன பண்ணலாம்?**


**ராஜா. தமிழ்நாடு. கொழும்பு**

**பதில்:** அப்போ சேமியாவியாபாரம் நடத்தியிருக்கிறீர் எனத் தோணுது. ராஜா சம்பாரிச்சா மட்டும் போதாது அதில மிச்சம் பிடிக்க தெரிந்து கொள்ள வேண்டும்.

**கேள்வி: மைடியர் பாம்ஸ் எனக்கு ஒரு விடயம் தெரிஞ்சாகனும் அந்தரத்தில் தொங்கும் கல் ஒன்று உலகத்தில் உள்ளதா?**

தர்ஷன் மட்டக்குளிய

**பதில்:** ஆம் உள்ளது.சவுதி அரேபியாவிலுள்ள அல் கசனா என்ற கிராமத்தில் உள்ளது இதனை அல்லாவின் அதிசயம் என முஸ்லிம்கள் நம்புவதாக தெரிவிக்கப்படுகிறது. உங்களின் பார்வைக்காக இதோ அந்தக் கல்.



**கேள்வி: ஹலோ பாம்பாட்டி குப்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல் எனச் சொல்கிறார்களே. இதனை நம்பலாமா?**

**ரவிசங்கர் வத்தளை**

**பதில்:** தனக்கொரு காரியம் ஆகனுமுன்ன தமிழன் அப்பப்ப இந்தமாதிரி புலுடாக்களை விடுவான்.

அதுக்காக மயக்கிப்போய் மதிகெட்டமாதிரி நடந்துகிட்ட உங்கபாடுதான் கஷ்டம்

**கேள்வி: ஸ்கிப்பிங் (கயிறு அடித்தல்) பயிற்சி செய்வதால் ஏற்படும் நன்மைகள் என்ன?**

**பாமினி யாழ்ப்பாணம்**

**பதில்:** 10 நிமிட ஸ்கிப்பிங் பயிற்சி 8 நிமிடங்களில் ஒருமைல் தூரம் ஓடியதற்குச் சமம். ஒரு மணி நேரத்தில் 1.300 கலோரிகளை எமது உடலில் இருந்து இது எரிக்கிறது தேவையற்ற கொழுப்பு கரையும் கூன்விழாது மன ஆழத்தம் குறையும்.

**கேள்வி: 2012 டிசம்பர் 21 ஆம் திகதி உலகம் அழியும் என்றார்களே நடக்க வில்லையே ஏன்?**

**சாவித்திரி கிளிநொச்சி**

**பதில்:** அந்த மாயன் கலண்டர் செய்த வேலை இது. இன்னமும் நாம் தேவையற்றவைகளை நம்பிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

**கேள்வி: ஹலோ பாம்பாடியாரே 2012 டிசம்பர் மாதத்தில் அதிசயங்கள மூன்று உள்ளன உம்மால் முடிந்தால் என்னவென்று சொல்லும் பார்க்கலாம்?**


**லக்ஷயா சங்கானை**

**பதில் :** 5 திங்கள்கிழமைகள் வருகின்றன, 5 சனிக்கிழமைகள் வருகின்றன, 5 ஞாயிற்றுக் கிழமைகள் வருகின்றன பதில் சரியா?

**கேள்வி: மைடியர் உம்மிடம் ஒரு கேள்வி முடிந்தால் பதில் சொல்லும் பார்க்கலாம்!முறுக்கப்பட்ட வடிவிலான மிக உயர்ந்த கட்டடங்கள் ஒரு நாட்டில் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அது எங்கே?**


**சத்தியா பம்பலப்பிட்டி**

**பதில்:** கனடா நாட்டின் தலை நகரான டொரன்டோவிற்கு அன்மையில் உள்ள Mississauge என்ற இடத் தில் இவ் வாறான கட்டடங் கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன இதோ அதன் புகைப் படம்.



## அறிந்து கொள்வோம்!

# முயற்சிகள் என்றும் தோற்பதில்லை!



1922ஆம் ஆண்டு ஒகஸ்டு 2 ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள அனைத்து தொலைபேசிகளின் சேவைகளும் ஒரு நிமிடம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. காரணம் தெரியாமல் விழித்த அனைவருக்கும் தொலைபேசியைக் கண்டு பிடித்த கிரஹாம்பெல் மரணமடைந்த தகவல் பின்னர் தான் சொல்லப்பட்டது.

1847இல் ஸ்காட்லாந்தில் எடின்பர்க் நகரில் பிறந்தவர் கிரஹாம்பெல். இவரது பாட்டனாரும், தந்தையாரும் பேச்சுக்கலையில் வல்லவர்கள். அதனால் அவர்கள் ஒலிபிறப்பியல் துறையில் ஆர்வம்காட்டி, ஒலி உண்டாவதற்குக் காரணமான குரல் வளை, நாக்கு, தொண்டை, உதடுகள் ஆகியவற்றை ஆராய்பவராக இருந்தார்கள்.

அலெக்சாண்டரின் தாயார் எலிசா இசையில் ஆர்வம் உள்ளவர் மட்டுமில்ல மிகச் சிறந்த ஓவியரும் கூட. ஆனால் தாயிடம் இசை பயிலும் வாய்ப்பு அலெக்சாண்டருக்குத் தொடர்ந்து கிடைக்கவில்லை.

காரணம் அவரது தாயாருக்கு ஒருவித நோயின் காரணமாக கேட்கும் திறனும், பேச்சுத் திறனும் முற்றிலுமாக பாதிக்கப்பட்டது இது கிரஹாம் பெல்லை மனதளவில் மிகவும் பாதித்தது. கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில் அவரது தம்பியும், அண்ணனும் தொடர்ந்து காசநோய்க்கு பலியானார்கள். இதனால் மற்றவர்களுக்கும் நோய் பாதிப்பு ஏற்படும் என்று பயந்த அவரது தந்தை குடும்பத்தை கனடாவுக்கு மாற்றினார்.

கனடாவில் காது கேளாதவர்களுக்கு பயிற்சிப் பள்ளியை துவக்கினார் பெல். அங்கு பகுதி நேரமாக குரல் உறுப்புகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, ஒலியியல் துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டார். ஒரே கம்பியில் ஆறேழு செய்திகளை அனுப்பக்கூடிய ஒத்திசைவான தந்தி முறையைக் கண்டறிந்தார்.

இவரது கண்டுபிடிப்புகள் அனைத்தும் காது கேளாதவர்கள், வாய் பேச முடியாதவர்கள் ஆகியோர் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளும் சிறந்த சாதனமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே பரிசோதனையில் இறங்கினார்.

அவரது தாயாரைப் போன்றே செவிக் குறையுடன் இருந்த மேபெல் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அதனாலேயே இந்தக் குறைகள் கொண்டவர்கள் மீது அதீத அக்கறை கொண்டு அவர்கள் வாழ்வுக்கு ஒளி சேர்க்கக்கூடிய கண்டுபிடிப்புகளை செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டினார்.

குரலியல் ஆய்வின்போது தான் மனித குரலை வேறு ஒரு இடத்துக்கு கம்பியின் மூலம் அனுப்ப முடியும் என்று அறிந்தார்.

அந்த நேரத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த எலிஷா மற்றும் தாமஸ் ஆல்வா எடிசன் ஆகியோரும், ஜேர்மனியின் பிலிப் என்பவரும் தொலைபேசியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இருந்தார்கள். இறுதியில் 1876 இல் கிரஹாம் பெல்லின் கண்டுபிடிப்பை அமெரிக்க அரசு ஏற்றுக்கொண்டது.

ஆனால் சில பொறாமைக்காரர்கள் அந்த கம்பியின் மூலம் மின்சாரம் பாய்ந்து பேசுபவர்கள் மரணமடைந்து விடுவார்கள் என்று பயம் காட்டினார்கள். ஆனாலும் அனைத்து அறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் இதனை செயல்படுத்திக் காட்டி வெற்றி கண்டார்.

தனது தாய், மனைவியின் குறைபாடுகளை நீக்குவதற்காக எடுத்துக்கொண்ட கண்டுபிடிப்பு கடைசியில் தொலைபேசியாக மக்களுக்குக் கிடைத்தது. இந்த வெற்றியை தனது 30ஆவது வயதிலேயே கிரஹாம்பெல் சாதித்தார்.

வெற்றியை நோக்கி அல்லது வெற்றிக்காக செய்யப்படும் எந்தவொரு முயற்சியும் தோல்வியடையாது என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் வேண்டுமா என்ன?

"எது கிடைக்கிறதோ அதுவே வெற்றி. எந்த வெற்றியும் கிடைக்கவில்லை என்றாலும் அந்த மாதிரி செய்தால் தோல்வி அடைந்துவிடுவோம் என்று பிறருக்கு எடுத்துச் செல்லும் வழியாக அமைந்துவிடும்" என்று சொன்னவர் கிரஹாம் பெல்.

45 ஆண்டுகள் தனது அறிவியல் வாழ்க்கையை மேற்கொண்ட அவர் மேலும் பல கண்டுபிடிப்புகள் கண்டறிந்தார். காற்றிலுள்ள நீரின் ஆவியைக் கொண்டு தூய நீரைப் பெறும் வழியைக் கண்டறிந்தது குறிப்பிடத்தக்கது. இதுதான் கடல் பயணிகளின் தாகம் தீர்க்க இன்றும் சிறந்த வழியில் உதவுகிறது.

ஒவ்வொருவரிடமும் குறைகள் இருக்கவே செய்யும். அந்தக் குறைகளை நீக்கி முழுமையடைய முடியும் என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னவர் கிரஹாம் பெல்.

முயற்சி செய்தால் தோல்வியடைந்து விடுவோம் என்று எண்ணி அமைதியாக இருப்பதைவிட ஒவ்வொரு முயற்சியிலும் எது கிடைத்தாலும் அதனை ஒரு வெற்றியாகவே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது தான் அவரின் கொள்கை.

குறைபாடுடன் இருந்த தாய்,மனைவியின் மீது அவர் கொண்ட நேசம் காரணமாக அவர்களுக்காக எதையாவது கண்டுபிடிக்க வேண்டும் என்று அவர் கொண்ட துடிப்பு, அவரை உலகறியச் செய்துவிட்டது.

முழு ஈடுபாட்டுடன் முயற்சிகள் மேற்கொள்ளும் பட்சத்தில் கண்டிப்பாக அதற்கான பலன் கிடைத்தே தீரும் என்பது எழுதப்படாத விதி.

ஆம், கிரஹாம்பெல்லின் கொள்கையை ஒவ்வொருவரும் மனதில் கொண்டால் எல்லோரும் ஏதாவது ஒரு சாதனையைக் கண்டிப்பாக படைக்க முடியும் அல்லவா?






**கன்னி**

நல்லவரனாக அமையும். குழந்தை பாக்கியம் கிடைக்கப் பெறுவர். விருந்து விழா என சென்று வருவீர்கள். குடும்பத்தில் நிலவிவந்த பிரச்சினைகள் அனைத்தும் தீரும் தம்பதிகளிடையே நிலவி வந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.





தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் நவோதயம் இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வில் அமைப்பின் தலைவர் கிருஷ்ணா மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் கலந்து கொண்டனர். சிறைச்சாலை கைதிகளுக்கு அமைப்பின் தலைவர் வேஷ்டி மற்றும் உணவுப்பொதிகள் வழங்குவதைப் படங்களில் காணலாம்.




கிருஷ்ணா கலாலயத்தின் 36 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற கலைத்தொன்றல் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட எஸ்.கே.கிருஷ்ணாவுக்கு கௌரவம் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.



**துலாம்**

உத்தியோகம் பார்ப்பவர்கள் பிந்தங்கிய நிலை மாறி முன்னேற்றம் காண்பர். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உங்கள் திறமை மேம்படும். கோரிக்கைகள் நிறைவேறும். விரும்பிய இடத்திற்கு பணியிடமாற்றம் கிடைக்கும்.





# பாம்பைப் பிள்ளையாக பெற்றெடுத்த பெண்!

மனிதப் பெண் ஒருவருக்கு பிள்ளையாகப் பாம்பு பிறந்து உள்ளது என்று ஒரு கிராமம் முழுமையாக நம்புகின்றது. இது நடப்பது வெளி நாட்டில் அல்ல. நம் நாட்டில்தான்.

கிழக்கிலங்கை யில் மட்டக்களப்பில் உள்ளது கடுக்கன் என்கிற தனித் தமிழ் கிராமம். இங்கு அனைவருமே இந் துக்கள். இக்கிராமத்தைச் சேர்ந்த பெண் முத்து லிங்கம் மோசிகசுந்தரி. 1966 ஆம் ஆண்டு பிறந் தவர். 46 வயது. 1983 ஆம் ஆண்டு 17 ஆவது வயதில் தகாயநாயகம் என்பவரை திருமணம் செய்தார்.


தகாயநாயகம் ஒரு கூலித் தொழிலாளி. இவருக்கு ஐந்து குழந்தைகள் பிறந்தன. முதல் இரண்டும் பெண் குழந்தை. மூன்றாவது ஆண். நான்காவது பாம்பு. ஐந்தாவது ஆண் குழந்தை. 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி காலை 5.00 மணிக்கு இப்பெண்ணுக்கு பாம்புக் குழந்தை பிறந்தது. இங்கு வீடுகளில்தான் பிரசவங்கள் நடந்திருக்கின்றன. மருத்துவிச்சிகள்தான் வந்து பிரசவம் மேற்கொண்டார்கள். வீட்டில் இருந்த வேப்ப மரத்தடியில் பிரசவம் நடந்தது. மருத்துவிச்சிகள், வீட்டுக்காரர்களுக்கு முன்பு ஒரு போதும் கேள்விப்பட்டு இராத கண்டிராத அதிசயத்தை பார்க்க நேர்ந்தது.

இப்பெண் கருத்தரித்து ஒன்பதாவது மாதத்தில் பாம்பு பிறந்து இருக்கின்றது. மதியம் 12.00 மணி அளவில் ஊர்ந்து போனது அது. நாக தம்பிரான் ஆலயத்தை சென்றடைந்தது. கோயில் புற்றை வசிப்பிடம் ஆக்கியது. பாம்பைப் பிள்ளையாக பெற்றமையால் சபிக்கப்பட்டவராக ஊர் மக்களில் ஒரு தொகையினரால் மோசிகசுந்தரி பார்க்கப்பட்டார். இவரை பழித்துப் பேசினார்கள்.

ஊரவர்களின் பழிச் சொற்களை தாங்க முடியாத இவர் நீ ஏன் என் வயிற்றில் வந்து பிறந்தாய்? எங்கேயாவது போய் விடு, இனி மேல் இங்கு வராதே என்று பாம்பை கடுமையாக திட்டி இருக்கின்றார். இதற்குப் பின் பாம்பு இவரது கண்களுக்கு படவே இல்லையாம். ஐந்து வருட காலம் இந்நிலை நீடித்தது. ஆனால் இந்த ஐந்து வருடங்களும் மோசிகசுந்தரியின் குடும்பத்துக்கு மிக மோசமான சோதனைக் காலமாக அமைந்தன. . வீட்டில் பயங்கர வறுமை. பல சமயங்களில் ஒரு நேரச் சாப்பாடுதான். சோதனை தாங்க முடியாமல் ஒரு நாள் நாக தம்பிரான் ஆலயத்துக்கு சென்று அழுது, குளறி சாமியை கும்பிட்டு இருக்கின்றார்.

அன்றில் இருந்து பாம்பு இவர் வீட்டுக்கு மீண்டும் வர தொடங்கியது. இப்போது இவர்கள் கஷ்டங்கள் தீரப் பெற்று, மிகவும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். இவரும், இவரது கணவரும் இப் பாம்பை தற்போது சொந்த பிள்ளையாகவே நடத்துகின்றார்கள். இவர்களின் மற்றப் பிள்ளைகளும் பாம்பை சகோதரர்களாகவே நடத்துகின்றனர். பாம்பு வந்து தங்குவதற்காக வீட்டுக் கோடியில் இடம் ஒன்றை ஒழுங்கு பண்ணிக் கொடுத்து உள்ளனர்.

பாம்பு குடிப்பதற்கு தண்ணீர் வைப்பார். பாம்புக்கு மோசிகசுந்தரியின் மன நிலையை புரிந்து நடக்கும். இவர் கோபமாக இருக்கின்றபோது அதன் பாட்டில் சென்று விடும். இவ்வளவு விபரங்களை சொல்லத் தொடங்கியபோதே உணர்ச்சி வசப்பட்டார் மோசிகசுந்தரி.





# முகப்பரு வடுக்களை நீக்குவது எப்படி?

**ப**ருக்கள் வருவதை விட, அவை விட்டுச் செல்லும் வடுக்கள்தான் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. பருக்கள் வராமல் தடுக்கவும் பரு வடுவைப் போக்கவும் வழி உள்ளதா? இது குறித்துச் சற்றுப் பார்ப்போமா?

முதலில் வடுக்கள் ஏன் ஏற்படுகின்றன என்றால், முகப்பரு வந்ததும் அதனை நகத்தால் கீறுகிறார்கள். நகம் பட்டாலே வடு விழுந்துவிடும். அதனை உடனடியாக போக்க முடியாது. சிறிது காலம் பிடிக்கும். சிலருக்கு பருக்கள் வந்து முகத்தில் சிறிய பள்ளங்களே ஏற்பட்டிருக்கும்.

முகப்பரு வந்தால் அதனை நீக்குவதற்கு முன்பு, ஐஸ் கட்டிகளால் ஒத்தடம் கொடுத்த பிறகு அதில் கை வைப்பது நல்லது. இதனால் பருக்களின் வழியாக ரத்தம் வெளியாவது தவிர்க்கப்படுகிறது. பொதுவாக பருக்கள் வந்தால் அது முற்றிய நிலையில் அதில் இருக்கும் வெள்ளையான திரவத்தை எடுத்து விடுவது மிகவும் முக்கியம். அதிலும் மற்ற இடங்களில் அவை படாமல் எடுக்க வேண்டியதும் அவசியமாகிறது.

மேலும் பருவை நீக்குவது என்பதை கவனமாக செய்ய வேண்டும். பருவை கைகளால் கிள்ளி எடுத்துவிடுகிறோம். அதில் இருந்து வெள்ளையான திரவம் வெளியான பிறகு ரத்தம் வரும். அதனை துடைத்துப் போட்டுவிட்டு அப்படியே விட்டுவிடக் கூடாது. அப்படி விட்டுவிட்டால்தான் பருக்கள் பரவுகிறது.


பருக்கள் வந்தால் அதனை நீக்கியதும் உடனடியாக அதனை சுத்தப்படுத்திவிட்டு அதில் ஏதாவது ஒரு பேஸ் பேக்கை (க்ரீம்) போட வேண்டும். அப்படி போடா விட்டால், பருவில் ஏற்பட்ட துளைக்குள் தூசு, துகள்கள் போய் பெரிய பிரச்சினையாகிவிடும். முகப்பரு வந்தவர்கள் அதிலும், அதிகமாக முகப்பருவினால்



### விருச்சிகம்

பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை கிடைக்கும். சகஊழியர்கள் உதவிகரமாக இருக்கும். சிலருக்கு முக்கிய பொறுப்புகள் வந்து சேரும். வேலையின்றி தவிக்கும் படித்தவர்களுக்கு வேலை கிடைக்கும். வியாபாரிகளுக்கு கடந்த காலத்தை விட சிறப்பான லாபம் கிடைக்கும்.





பாதிக்கப்படுபவர்கள் தங்களது முகத்தை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். பருக்கள் வருபவர்கள் எந்த விதமான க்ரீம்களையும் பயன்படுத்தக் கூடாது. சிலரது முகத்தில் விரலைக் கூட வைக்க முடியாது. அந்த அளவிற்கு வலி எடுக்கும். அவர்கள் அழகுக் கலை நிபுணரிடம் செல்வதை விட, ஒரு தோல் மருத்துவரிடம் செல்வதுதான் நல்லது.

அழகுக் கலை நிபுணரால் எல்லாமே செய்ய முடியாது. எனவே, அவர்களுக்கு அடிப்படையில் என்ன பிரச்சினை இருக்கிறது என்பதை மருத்துவர் மூலம் அறிந்து கொண்டு அதற்கு முதலில் சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

பருவை மட்டும் நீக்கிவிட்டாலும் உள்ளுக்குள் இருந்து சீழ் போன்ற ஒன்று வந்து கொண்டே இருக்கும். அதனை எவ்வளவுதான் எடுக்க முடியும். ஒரு வேளை அது சருமத்திற்கு அடியிலேயே தங்கி விட்டாலும் பிரச்சினையாகிவிடும். அதிகமாக எடுத்தாலும் பரு இருந்த இடத்தில் வடு ஏற்பட்டுவிடும். எனவே பருவை அழகுக் கலை நிபுணரிடம் சென்று நீக்கிக் கொள்வதை விட, அதிகமாக பரு இருப்பவர்கள் ஒரு மருத்துவரிடம் செல்வதுதான் நல்லது.

பருக்களினால் ஏற்பட்ட வடு நிச்சயமாக போகும். அதற்கு ஒரு நீண்ட சிகிச்சை உள்ளது. முதலில் பரு உள்ளவர்கள் பேஷியல் செய்து கொள்ளவே கூடாது. ஏனெனில் பரு வருகிறது என்றால் அவர்களது சருமத்தில் அதிகப்படியான எண்ணெய் பசை உள்ளது. மேலும், பேஷியலின்போது பயன்படுத்தும் க்ரீம்கள் அனைத்திலும் அதிகப்படியான எண்ணெய் பசை தான் இருக்கும். எனவே அவர்களது சரு மத்தை பேஷியல் மேலும் சிக்கலாக்கும். முகத்தில் அதிகமான பருக்கள் இருப்ப வர்கள் அவசியமாக பேஷியல் செய்தே ஆக வேண்டும் என்று நினைத்தால் முத லில் ஒரு மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுவிட்டு பிறகு பேஷியல் செய்து கொள்ளலாம்.ப்ளீச் செய்யலாம். ஏனெனில் ப்ளீச் செய்வதால் முகத்தில் இருக்கும் எண் ணெய் தன்மை நீக்கப்பட்டு விடும். எனவே ப்ளீச்சிங் செய்து கொள்ளலாம். தவறில்லை.



அவனது வீரத்தை உபயோகித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயலுகிறது. மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சமாதானம் செய்து ரிமோனை அழைத்துப் போவதற்காக, ஏதென்ஸிலிருந்து இரண்டு செனேட்டர்கள் வருகிறார்கள்.

பிறக்கிறது."பிரபுவே" என்று வாயார வாழ்த்துகிறார்கள். "ஏதென்ஸ் நகரவாசிகளிடம் இதைப் போய்ச் சொல்லுங்கள். இங்கே ஒரு பெரிய மரம் செழித்து வளர்ந்திருக்கிறது. அதை என்னுடைய உபயோகத்திற்காக வெட்டிவிடலாம் என்றிருக்கிறேன். ஏதென்ஸ்



# ரிமோன் கண்ட உண்மைகள்

பிளாவியஸ், அவர்களை அழைத்துக்கொண்டு வருகிறான். ஆனால் எச்சரிக்கிறான் - டைமன் யாரையும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை என்று.இருந்தாலும் ஆசை யாரை விட்டது, அதுவும் அபாயம் பின்புறம் நின்று துரத்தும் போது.குகைக்கு வெளியே வந்து நின்று கொண்டு பெயர் சொல்லி அழைக்கிறார்கள்."அடே நாசமாய்ப் போக் நாக்குப் புழுத்துப்போக" என்று ஏசிக்கொண்டு வெளியே வருகிறான்.

ஏதென்ஸ் நகரத்தின் சார்பாக மன்னிப்புக் கேட்கிறார்கள். அல்க்கிப்யாடிஸின் சீற்றத்தைத் தடுக்கத் தாங்களே வந்து தலைமை பூண்டு சேனையை நடத்திச் செல்லவேண்டும் என்று கோருகிறார்கள்.

அல்க்கிப்யாடிஸிடம் இதைச் சொல்லுங்கள்: "அவன் எப்படி கொலை செய்து குடலைப் பிடுங்கி எறிந்தாலும் ரிமோனுக்குக் கவலையில்லை கிழவர்களை, கன்னிகளை, வாலிபர்களைக் கொன்று யுத்தம் என்ற யாக குண்டத்தில் போடட்டும் ரிமோனுக்குக் கவலையில்லை. பணக்காரக் கடவுள்கள் எங்களைக் காப்பாற்றும் திருடர்கள், பணக்காரர்களைக் காப்பாற்றுவதைப் போல" என்று சொல்லுகிறான் ரிமோன்.

"அவரிடம் பேசிப் பிரயோஜனம் இல்லை திரும்பிப் போங்கள்" என்று சொல்லுகிறான் பிளாவியஸ்.

"ஏதென்ஸ் நாசமாக போகிறதென்றால் வருத்தமாகத் தானிருக்கிறது. எப்படியிருந்தாலும் தாய்நாடு அல்லவா" என்று ஆரம்பிக்கிறான் ரிமோன்.செனேட்டர்களுக்கு நம்பிக்கை மக்கள் எல்லோரும், அவகாசத்தை நழுவ விடாமல் சீக்கிரம் வந்து அந்த மரத்தில் தூக்குப் போட்டுக் கொள்ளட்டும் பிறகு மரம் இருக்காது" என்று கிண்டல் செய்கிறான் ரிமோன்."அவரிடம் பேசிப் பயனில்லை. அவர் இப்படியேதான் சொல்லிக் கொண்டிருப்பார்" என்கின்றான் பிளாவியஸ்.

ரிமோன் கடற்கரையருகே அழியாத மாளிகை கட்டிக்கொண்டான் கடல் அலைகள் அந்த மாளிகையைத் தினசரி குளிப்பாட்டும் என்னுடைய கல்லறைக் குத்துக்கல், கைத்த வார்த்தைகளில் நோய்க்கும் போருக்கும் மிஞ்சுகிறவர்களைச் சபிக்கும் என்று ஏதென்ஸுக்குச் சொல்லுங்கள், ரிமோன் ஆட்சி முடிந்தது."அல்க்கிப்யாடிஸ் ஏதென்ஸ் நகரத்தின் மதில்களை எட்டி விட்டான். தொடை நடுங்கித் தலைவர்கள் சரணாகதி செய்துவிட்டார்கள். ரிமோனுக்குக் கொடுமை இழைத்தவர்களுக்கு அவர்கள் வகுத்த சட்டமே நியாயம் சொல்லும் என்று எச்சரிக்கிறான். எதற்கும் சம்மதிக்கிறார்கள் யுத்தமில்லாவிட்டால் போதும்.ஆனால் வெற்றிக்கு முந்திவிட்டான் ரிமோன். அவனைத் தேடிச்சென்ற சோல்ஜர் அங்கு ஒரு கல்லறையைத் தான் பார்க்கிறான். அதிலே "இங்கு கிடக்கிறது ஒரு சடலம் என் பெயரைக் கேட்காதே லோகத்தில் எஞ்சிய தீயோர்கள் நாசமாய்ப் போக. உலகம் வெறுத்த ரிமோன்கூறுவது இது. ஆசை தீரச் சபித்துவிட்டுப் போ. நிற்காதே போ" என்று பொறித்திருந்தது.தாராளமாக வழங்கிய கை மண்ணாகி மக்கிச் சபிக்கிறது.

**புதுமைப்பித்தன்**




வெற்றிகள் குவியும். உங்களை அவமானப்படுத்தியவர்கள் தங்களின் தவறை உணர்ந்துகொள்வார்கள். ஆத்ம பலம் அதிகரிக்கும். சேமிப்புகளில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளால் உங்கள் மகிழ்ச்சி இரட்டிப்பாகும். உடல் உபாதை நீங்கும்.






## யாழில் தமிழ் ஆராய்ச்சி மாநாடு!

**1958 - ஜனவரி முதலாம் திகதி** இலங்கையில் வாகன இலக்கத்தகடுகளில் சிங்கள மொழியில் ஶ்ரீ எழுத்து கட்டாயமாக்கப்பட்டது.

1883 -இதே தினத்தில் இலங்கையின் தமிழர் தாயகம் வடக்கு, கிழக்கு என இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.

**1959 - ஜனவரி 2ஆம் திகதி** சோவியத் ஒன்றியம் லூனா 1 என்ற உலகின் முதலாவது செயற்கைச் செய்மதியை விண்ணுக்கு ஏவியது.

**1974 - ஜனவரி 3ஆம் திகதி** யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமானது.

2004 - இதே தினத்தில் ஸ்பிரிட் என்ற நாசாவின் விண்கலம் செவ்வாயில் தரையிறங்கியது.

**2000 - ஜனவரி 5ஆம் திகதி** இலங்கையின் தமிழ் அரசியற் தலைவர் குமார் பொன்னம்பலம் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டார்.

**1841 - ஜனவரி 7ஆம் திகதி** உதயதாரகை பத்திரிகை தமிழ், ஆங்கில இருமொழிப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த முதலாவது பத்திரிகை இதுவாகும்.

**1924 - ஜனவரி 9ஆம் திகதி** இலங்கையின் தேசியத் தலைவர் சேர் பொன்னம்பலம் அருணாசலம் காலமானார்

**1946 - ஜனவரி 10ஆம் திகதி** லண்டனில் ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகளின் முதலாவது பொதுச் சபைக் கூட்டத்தில் 51 நாடுகள் பங்குபற்றின.

1974 - இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வில் 11 பொதுமக்கள் காவல்துறையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டனர்

**1863 - ஜனவரி 12ஆம் திகதி** சுவாமி விவேகானந்தர் பிறப்பு.

1967 - இதே தினத்தில் நடிகர் எம். ஆர். ராதா, எம். ஜி. ராமச்சந்திரனை துப்பாக்கியால் சுட்டுப் படுகாயப்படுத்தினார்

**1950 - ஜனவரி 14ஆம் திகதி** சோவியத் ஒன்றியத்தின் மிக்-17 போர் விமானம் வெள்ளோட்டம் விடப்பட்டது.

**2001 - ஜனவரி 15ஆம் திகதி** விக்கிப்பீடியா தொடங்கப்பட்டது.



# உலக சுற்றுலா பயணிகள்

## கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்கள்



### திருமலை கோணேஸ்வரர் ஆலயத்தில்

திருகோணமலை கோணேஸ்வரார் ஆலயத்தில் புதிதாக 30 அடி உயரமான சிவன் சிலை நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

மலையுச்சியில் கடல்பக்கம் புதிதாக பல சிலைகளை அமைத் துள்ளனர். அவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வருகிறது. அவற்றில் ஒன்றை படத்தில் காணலாம்.



### யாழ்ப்பாணம் கோட்டை!

யாழ். கோட்டையை பார்ப்பதற்கு நாள்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் படையெடுத்து வருகின்றனர். பெரும்பாலும் தென்னிலங்கை மற்றும் வெளிநாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு யாழ்ப்பாணம் கோட்டை ஒரு முக்கிய சுற்றுலாத் தளமாக மாறியுள்ளது.

இதனால் யாழ்ப்பாணம் வரும் பயணிகள், வடமாகாணத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அறிந்துகொள்வதற்கு வசதியாக தேசிய மரபுரிமை அமைச்சு மற்றும் தொல்லியல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வரலாற்று சிறப்பு மிக்க இடங்களின் புகைப்படங்கள் கோட்டைக்குள் காட்சிப்படுத்தியுள்ளன. இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகள் கோட்டையை பார்வையிடுவதுடன் வடமாகாணத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை அறியக்கூடிய வாய்ப்பையும் பெற்றுள்ளனர்.



# நாய்களுக்கு பல்துலக்கி கின்னஸ் சாதனை

ஹொங்கொங்கில் ஒரே நேரத்தில் 300 நாய்களுக்கு பல் துலக்கப்பட்டு புதிய கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இதில் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 312 பேர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து ஹில்டா வாங் என்ற பெண் கூறுகையில், எஜமானர்கள் தங்கள் நாய்களின் உணவு மற்றும் அதன் ரோமத்தில் அதிக அக்கறை எடுத்து கொள்கின்றனர்.

ஆனால் நாய்களின் பற்கள் விஷயத்தில் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. வாரத்திற்கு ஒரு முறையாவது, நாய்களுக்கு பல் துலக்க மறக்கக்கூடாது. நாய்களுக்கு தினமும் பல்துலக்கினால் அதன் சுகாதாரம் மேம்படும் என்று தெரிவித்தார்.

நாய்களின் பற்களை தூய்மை செய்த இந்த நிகழ்ச்சி, கின்னஸ் சாதனை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான்கு மாதத்திற்கு பின்பு இது தொடர்பாக கின்னஸ் நிறுவனம் சான்றிதழ் அளிக்க உள்ளது.



# வானத்திலிருந்து வீழ்ந்த நீலப் பனிக்கட்டி

**வா**னத்தில் இருந்து விழுந்த நீலநிறப் பனிக்கட்டி ஒன்று தமிழகத்தில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பேரணாம்பட்டு-குண்டலபல்லி வீதியில் கள்ளிச்சேரி கிராமம் உள்ளது. இந்த கிராமத்தைச் சேர்ந்த சக்தி (24) என்ற இளம்பெண், கடந்த டிசம்பர்18 ஆம் திகதி காலை வீட்டு முன் கோலம்போட சென்றார். அப்போது, வானத்தில் இருந்து நீல நிறத்தில் பனிக்கட்டி ஒன்று விழுந்தது. இதை பார்த்து அதிர்ச்சியடைந்த சக்தி , தனது குடும்பத்தினரிடம் கூறினார்.

இதுகுறித்து, தகவல் சுற்றுவட்டாரத்தில் பரவியது. கிராம மக்கள் அங்கு திரண்டனர், சுமார்50 கிலோவரை எடை கொண்ட அந்தப் பனிக்கட்டியை சிறுசிறு துண்டுகளாக உடைத்து எடுத்துச் சென்றனர். தகவல் காட்டுத்தீ போல பரவியதால், அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்தனர். நீலநிற பனிக்கட்டி துண்டுகளை வியப்புடன் பார்த்தனர்.

இதுகுறித்து, அந்த கிராம மக்கள் கூறுகையில், அந்த பனிக்கட்டியில் இருந்து ஒருவித வாசனை வீசியது. பிசுபிசுப்புடன் இருந்தது. தொட்டபோது நீலநிறம் கைகளில் ஒட்டிக் கொண்டது என்றனர்.



**மகரம்** குடும்பத்தில் கணவன், மனைவி இடையே அன்பு நீடிக்கும். சுப நிகழ்ச்சிகள் உடனடியாக நிறைவேறாமல் போகலாம். அனைத்தும் சுபமாக நிகழும். உத்தியோகம் பார்ப்பவர்கள் தொடர்ந்து சற்று சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியதிருக்கும். உங்கள் உழைப்புக்கு தகுந்த செல்வாக்கும் பணவரவும் கிடைக்கும்.





# ஒருவயதுக் குழந்தை கிழவனாக மாறுமா?

**ம**த்திய சீனாவின் ஹெனான் மாகாணத்தில் அமைந்துள்ள குழந்தைகள் மருத்துவ மனையில் தஞ்சம் கிடக்கும் ஒரு தாயின் குழந்தை பற்றிய அதிர்ச்சியூட்டும் செய்தியே இது.

பிறந்து 18 மாதங்களே ஆன ஒரு குழந்தை தோல் சுருங்கி வயதான தோற்றத்துக்கு மாறினால் எந்த தாய்க்குத்தான் மனம் பதறாமல் இருக்கும்?

சீனாவில் வசிக்கும் 23 வயதே ஆன இளம் தாய் யாங். இவருக்கு கடந்த 18 மாதங்களுக்கு முன்னர் ஒரு குழந்தை பிறந்தது. அதுதான் யுக்சீன் என அழைக்கப்படுகிறது. குழந்தை வளரத்தொடங்க அதன் சருமத்தில் மாற்றங்களை அவதானித்திருக்கிறார் யாங். இருந்தும் இதனை பலரிடம் சொல்லியும் ஒரு பெரிய விடயமாக அது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

காலப்போக்கில் குழந்தையின் தோல் தொய்ந்து கழுத்து கன்னம் முகம் போன்ற பகுதிகள் முற்றாக சுருங்க ஆரம்பித் துள்ளன. இதன் பின்னர் டாக்டர்களின் உதவி யை நாடினார் யாங். குழந்தையை பரிசோதனை செய்த டாக்டர்கள் இந்நோய்க் கான சரியான காரணத்தை கண்டுபிடிக்கமுடியாமல் தவித்தனர். எனினும் இரு ஒரு பரம்பரை நோய் அல்லது திசு சம்மந்தப்பட்ட நோயாக இருக்கலாம் என சந்தேகிக்கின்றார்கள். மேலும் குழந்தை கருவுற்றிருக்கும் போது ஏதாவது தவறுகள் நடந்திருக்கலாம் எனவும் சந்தேகிப்பதாக டாக்டர்கள் தெரிவிக்கின்றார்கள்:

எது எப்படியோ இதனை கண்டுபிடித்து சிகிச்சை அளிக்க அதிக பணம் தேவைப் படுவதாக டாக்டர்கள் அறிவித்துள்ளார்கள். பணம் என்பதை கருத்தில் கொள்ளாது மனம் ஒன்றே போதும் என குழந்தையும் வைத்திசாலையுமாக தனது வாழ்க்கைய கழித்துக்கொண்டிருக்கிறார் யாங்.



# மின்னலுக்குப் பின் இன்னல்

'பிளாக்சாமி காண்ட்ராக்டர்' படம் மூலம் கோலிவுட்டுக்கு வந்தார் அந்த மும்பை மோகினி. அந்தப் படத்தில் படு பாந்தமாக நடித்திருந்தார் மீன். ஆனால் அவரின் நடவடிக்கைகளோ பாந்தத்திற்கு எதிராக படுபந்தாவாக இருந்தது. அழகும் திறமையும் கவர்ச்சியும் இருந்தாலும் கூட அவருக்கு பெரிய ஹீரோக்களின் கருணைப் பார்வை எட்டாமல் இருந்தது. இந்த சமயத்தில் 'அஞ்சாத' படம் மூலம் அறிமுகமாகி 'கோ' படத்திலும் முதலமைச்சராக நடித்திருக்கும் 'அஜ்' நடிகரோடு மீன் நடிகை 'டாக்ஸி' படத்தில் சேர்ந்து நடித்தார். ஸ்பாட்டில் நடிகையை வசப்படுத்த வித விதமாக வலை விரித்தார் நடிகர். ஆனால் எந்த வலையிலும் சிக்கவில்லை இந்த மீன்.

எனினும் வடபழனியிலுள்ள ஆதியான ஹோட்டலில் அந்த நடிகை தங்கியிருப்பதை தெரிந்து கொண்ட நடிகர் நடிகையின் அறைக்கு பக்கத்து அறையைக் கேட்டு வாங்கி அங்கு தங்கினார். ஷூட்டிங் ஸ்பாட்டில் அதிகம் பேசாமல் விலகி யிருந்த நடிகை இப்போது நடிகர் தன் 'ஹோட்டல்மேட்' ஆகிவிட்டதால் தவிர்க்க முடியாமல் பேச ஆரம்பித்தார்.

ஷூட்டிங் இல்லாத ஒருநாள நடிகை தன் ரூமை விட்டு வெளியே வரவில்லை. காரணம் உடம்பு வலி. இதைத் தெரிந்துகொண்ட நடிகர், தயங்கித் தயங்கி நடிகையின் அறைக் கதவைத் தட்டினார்.

கதவைத் திறந்த நடிகையிடம் 'உடம்பு வலின்னு கேள்விப்பட்டேன். இப்ப எப்படி இருக்கு?' என நலம் விசாரித்தவர் 'எங்க ஊர்ல (கேரளா) உடம்பு சம்பந்தமான எல்லா பிரச்சினைகளுக்கும் மஸாஜ் ட்ரீட்மெண்ட்தான். நீங்க அனுமதிச்சா அந்த ட்ரீட் மெண்ட்டை பண்றேன்' என பிட்டை போட்டார்.

மறுத்தார் நடிகை.

'நான் வைத்தியர். நீங்க நோயாளி' அப்படின்னு நினைச்சுக்கங்களேன் என வசிய வார்த்தைகளை நடிகர் வீச, தயக்கத்துடன் சம்மதித்தார் நடிகை.

மயங்க வைத்தது மசாஜ். அதன் பிறகுதான் இருவரும் சகஜமாக பழக ஆரம்பித்தார்கள். மசாஜில் தொடங்கி காபியில் வளர்ந்து, மதுவில் நெருங்கியது இவர்களின் நட்பு. நாளாவட்டத்தில் இவர்களின் நட்பு காதலானது.

ஒருநாள் விருந்துக்கு ஆசைப்பட்ட நடிகருக்கு தினந்தோறும் விருந்து வைத்தார் நடிகை. நடிகரே கதி என நடிகை கிடக்க - நடிகைக்கு ஆலோசகர் போல இருந்த மீடியா லேடி, நடிகையை சந்தித்து அட்வைஸ் பண்ணினார். 'கூட நடிக்கிற நடிகையை தொடணும்னு நடிகர்கள் ஆசைப்படத்தான் செய்வாங்க.

'போனமா வந்தமா'னு அளவோட வச்சுக்கிட்டு ஒதுங்கிரணும். நீ இவரோட மட்டுமே நெருக்கமா இருந்தா 'இவ அவன் ஆளு'னு சொல்லி மத்த ஹீரோக்கள் உனக்கு வாய்ப்புத் தரமாட்டாங்க. இவருமே இவர் நடிக்கிற படத்துலயெல்லாம் உனக்கு சான்ஸ் வாங்கித் தந்திட முடியாது.

உன்னோட இளமைக்கும் அழகுக்கும் வெளி ஒ.:.பர் நிறைய வரும். 'அந்த' புரோக்ராம் களை பண்ணினா கூட பணம் வரும். இப்படி பொழைக்கிற வேலய விட்டுப்புட்டு, வெட்டிவேல பாக்காதேனு .:.பீல்டு நடப்பை எடுத்துச் சொன்னார் அந்த லேடி.

அதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட நடிகை சொன்னார். 'நான் அவனை ரொம்ப ரொம்ப லவ் பண்றேன்.'

அதிர்ச்சியானார் லேடி.

'அது ஏன் நடிகைகள்னாலே பொதுவா இப்படி இருக்கீங்க?'

'எப்படி இருக்கோம்? எல்லாரையும் போலத்தான இருக்கோம். நடிகைன்னா மனுஷி இல்லையா? மனசு இல்லையா? அந்த மனசுல காதல் வரக்கூடாதா?' என கோபமாகக் கேட்டார் நடிகை.

'நடிகைகள் காதலிக்கக்கூடாது, அவங்களுக்கு காதல் வரக்கூடாதுன்னு சொல்லல. அடுத்தவங்க வாழ்க்கையை ஏன் தட்டிப்பறிச்சு நீங்க வாழ ஆசைப்படுறீங்கன்னுதான் கேக்குறேன்"

புரியலையே?

'அந்த நடிகர் ஏற்கனவே கல்யாணம் ஆனவர்" லேடி சொன்னதும் திடுக்கிட்டுப் போனார் நடிகை.

டென்ஷனில் ஒரு பாட்டில் மினரல் வாட்டரையும் ஒரே மூச்சில் காலி செய்துவிட்டு ஆத்திரம் குறையாமலே இருந்தார்.

லேடி கிளம்பிப் போனார்.

வழக்கம்போல இரை தேடி வந்தார் நடிகர்.

ஆத்திரத்தை அடக்கிக்கொண்ட நடிகை, 'ஏன் இப்படி ஏமாத்துனே?' என கேட்டார்.

'விஷயம் புரியாமல் நடிகர் முழிக்க'

'ஒனக்கு ஏற்கனவே கல்யாணமானதை ஏன் சொல்லலை'?

'நீ கேட்கலியே?'

'கேக்கலேன்னாலும் சொல்லீருக்கணுமே!'

'எதுக்குச் சொல்லணும்?'

'நான் உன்னை லவ் பண்ணினனே'

வாய்விட்டுச் சிரித்துவிட்டு நடிகர் சொன்னார். 'நான் உன்னை லவ் பண்ணலியே'

அதற்கு மேல் நடிகை எதுவும் பேசவில்லை. அவர்களின் தொடர்பும் முறிந்துபோனது.



**கும்பம்** உங்களின் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். புதிய தெளிவுடன் செய்தொழிலை நடத்துவீர்கள். இதனால் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். உங்கள் மீது வைத்திருந்த தவறான அபிப்ராயத்தை சகோதர, சகோதரிகள் மாற்றிக்கொள்வார்கள்.



# மலைக்குகைக்குள் குடும்பம்!



கணவன், இரு மனைவி, 13 பிள்ளைகளை உள்ளடக்கிய குடும்பமொன்று Moab Utah பகுதியில் உள்ள மலை குன்றையே தமது இருப்பிடமாக மாற்றியுள்ளனர். இந்த குன்றின் அமைப்பு வீடுகளை அமைக்க வசதியாய் அமைந்ததோடு அருகிலிருக்கும் வளமான விவசாய நிலமும் இருப்பிடத்திற்கு துணையாய் அமைகின்றன.

Rockland Ranch community எனும் இந்த மலை சார்ந்த குடியிருப்பில் ஏராளமானோர் குடியேறியுள்ளனர், கிழங்குகள் உற்பத்திக்கு மண்வளம் பெரிதும் ஒத்துப் போவதால் பெருமளவானோர் இதில் முதலிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விவசாய நிலம் குறித்த தகவல்கள் வெளியில் பரவத் தொடங்கியதால் பிற மாநிலங்களிலிருந்தும் அதிகமானோர் இங்கு வரத் தொடங்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



**மீனம்**

திருப்திகரமான வாரம். செய்தொழிலில் அனுபவசாலிகளின் உதவிகளைப் பெறுவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். உங்களின் மதிப்பு, மரியாதைக்கு எந்த பங்கமும் வராது. உற்றார் உறவினர்கள் நேசக்கரம் நீட்டுவார்கள். வருமானம் படிப்படியாக உயரும்.





